Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 14, 2022

புதன்கிழமை, 14 செப்டெம்பர் 2022 | ஒளி: 08 கதிர்: 099 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free

# வலுவான இறுதி வரைபு வரும்

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நம்பிக்கை



ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் மனித உரிமை உயர்ஸ்தானிகர் இலங்கையின் பொறுப்புக்கூறல் தொடர்பில் மிக விவரமானதும் உறுதியானதுமான வாய்மூல அறிக்கையை முன்வைத்துள்ளார். இதனை வரவேட்பதாகவும், உறுப்பு நாடுகளின் காத்திரமான நிலைப்பாட்டுக்கு அமைவாகவே இறுதி வரைபு தயாரிக்கப்படும் என உறுதியாக நம்ப முடியும் எனவும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்று முன்தினம் (12) இலங்கை குறித்த விவாதங்கள் முன்னெடுக்கப்பட்ட நிலையில், அது குறித்து கருத்து தெரிவித்த போதே கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ சுமந்திரன் இதனை தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# மகாராணிக்காக 19 விசேட விடுமுறை



பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபெத்தின் இறுதிச் சடங்கு இடம்பெறும் தினமான எதிர்வரும் திங்கட்கிழமை (19) அரச விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் நாட்டில் தேசிய துக்கதினம் பிரகடனப்ப டுத்தப்பட்டுள்ள நிலையில் நேற்றையதினம் (13) இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2




வெளியக பொறிமுறையை நிராகரித்தமை

# அரசாங்கத்தின் நிலைப்பாடு

மஹேஸ்வரி விஜயனந்தன்

இலங்கை அரசியல் அமைப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், பொருத்தமானதுமான பொறிமுறை ஒன்றின் ஊடாக, உள்ளக பொறிமுறை மூலமாக, பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதே ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் தீர்மானமாகும். உள்ளக பொறிமுறையைத் தாண்டிய தீர்மானங்கள், இலங்கை அரசியல் அமைப்பை மீறும் செயற்பாடாகும்.

தொடர்ச்சி P2

# இந்தியா, சீனா, ஜப்பானுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

மஹேஸ்வரி விஜயனந்தன்



சர்வதேச நாணய நிதியத்தின் பிணையெடுப்பை இலங்கை நாடும் நிலையில், இலங்கையின் கடனை மறுசீரமைப்பது குறித்து இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் நிதி ஆலோசனைக் குழுவான 'லாசார்ட்' பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக பதில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தனிநபருக்கு ரூ.13,138 தேவை



நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளுக்கு அமைய, அடிப்படை தேவைகளை பூர்த்திசெய்ய ஒரு மாதத்துக்கு ஒரு நபருக்கு 13,138 ரூபாய் தேவைப்படுவதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஜூலை மாத தரப்படுத்தலுக்கமையவே இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல் நான்கு உறுப்பினர்களை கொண்ட ஒரு குடும்பத்தின் ஒருமாத செலவு 52,552 ரூபாயாகவும் கொழும்பு மாவட்டத்தில் அத்தொகை 56,676 ரூபாயாகவும் உயர்வடைந்துள்ளது எனவும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# 10,000 ஹோட்டல்கள் மூடப்பட்டன




கோதுமை மா, முட்டை, இறைச்சி, மீன் போன்றவற்றின் தட்டுப்பாடு காரணமாக நாடளாவிய ரீதியில் உள்ள 30,000 ஹோட்டல்களில் சுமார் 10,000 ஹோட்டல்கள் முழுமையாக மூடப்பட்டுள்ளதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# அரசியல்வாதிகளை மகிழ்விக்க அதிக அமைச்சர்கள் நியமனம்

## அதிக பேருக்கு அனுமதி ஏன்? ஜனாதிபதியிடம் பஃப்ரல் கேள்வி

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், அரசியல் கட்சிகள் மற்றும் அரசியல்வாதிகளை மகிழ்விப்பதற்கும் அரசியல் அதிகாரத்தை தக்க வைப்பதற்கும் அதிக எண்ணிக்கையிலான அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்களை நியமிப்பதால் அதிக செலவுகள் ஏற்படும் என்று சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (பஃப்ரல்) அமைப்பு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

இனப்படுகொலை

# பன்னாட்டு குற்றமாகும்



வி.ரி. சகாதேவராஜா

1948 டிசெம்பர் 09 இல் உருவான ஐ.நா சபையின் 260ஆவது இலக்க தீர்மானத்தின் அடிப்படையில், இனப்படுகொலையானது ஒரு பன்னாட்டு குற்றமாகும். ஆனால், இதனை தொடர்ச்சியாக இலங்கையில் பேரினவாதம் முன்னெடுத்து வருவதாக, தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் சேர்ந்த மாணவர் மீட்பு பேரவையின் தலைவர் செல்வராஜா கணேஷ் தெரிவித்தார்.

அனைத்து உலக மனித உரிமை ஸ்தாபனம், இனப் படுகொலைகளுக்கு எதிரான தமிழர்கள் கூட்டமைப்பு என்பன இணைந்து, ஐ.நா கூட்டத்தொடர் நடக்கும் மண்டபத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (12) கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



தொடர்ச்சி P2

சனத் நிஷாந்தவின் சர்ச்சை கருத்து

# ஆஜராக அழைப்பாணை பிறப்பிப்பதா, இல்லையா?

## செப்டெம்பர் 29 இல் அறிவிப்பு

நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சனத் நிஷாந்தவை மன்றில் முன்னிலையாவதற்கு அழைப்பாணை பிறப்பிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் அறிவிப்பதற்கான தினமான செப்டெம்பர் 29ஆம் திகதியை மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (13) நிர்ணயித்தது.

நிஷங்க பந்துல கருணாரத்ன, ஆர். குருசிங்க ஆகியோர் அடங்கிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் மனுக்கள் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்தத் தினம் நிர்ணயிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

நாட்டில் மருந்து தட்டுப்பாடு

# மரணத்தைத் தவிர மாற்றுவழி இல்லை



விசப் பாம்பு தீண்டினாலோ அல்லது விசர் நாய் கடித்தாலோ அவற்றைக் குணப்படுத்துவதற்கான மருந்துகள் இலங்கையில் இல்லை எனத் தெரிவிக்கும் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன, மரணத்தைத் தவிர வேறு மாற்று வழி இல்லை எனவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடுகளால் பலர் உயிரிழக்கிறார்கள். புற்று நோயாளர்களுக்கு தேவையான வைத்திய செலவுகளுக்கு 15 இலட்சத்தை மாத்திரமே செலவு செய்வதற்கு வரையறை விதிக்கப்பட்டுள்ளது. அப்படி என்றால் 15 இலட்சத்தைத் தாண்டினால் என்ன செய்வது? என நான் எழுப்பிய கேள்விக்கு எவரிடமும் பதில்லை. அப்படி என்றால் அவர்களுக்கும் மரணம் தான் எனவும் கூறினார்.

# ஜெனீவா புறப்பட்டார் சுமந்திரன்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் நேற்று இரவு (13) ஜெனீவாவுக்கு புறப்பட்டார். எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் ஜெனீவாவில் இடம்பெறவுள்ள இலங்கை தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணைக்கான வரைபு தொடர்பிலான கலந்துரையாடல்களில் ஈடுபடவே அவர் இவ்வாறு ஜெனீவா புறப்படுவதாக தமிழ் மிரருக்கு தெரிவித்தார். அமெரிக்கா மற்றும் பிரித்தானிய அதிகாரிகள் மட்டத்திலான கலந்துரையாடலும் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 417 கைதிகளுக்கு விசேட மன்னிப்பு

இலங்கையின் அரசியலமைப்பின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 417 சிறைக் கைதிகளுக்கு விசேட அரச மன்னிப்பு வழங்கப்பட்டது. சர்வதேச சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு, நேற்று முன்தினம் (12) வரையான காலப்பகுதி வரை தண்டனை அனுபவித்த கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டதாக சிறைச்சாலைகள் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

பொருளாதார குற்றங்கள் எனக்கூறி

# இலங்கைக்கான பொருளாதார உதவிகளை தடுக்க முயற்சி



பொருளாதார குற்றங்கள் குறித்து உரையாடும் சட்டபூர்வ தன்மை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு உள்ளதா என்ற கேள்வி எழுவதாகவும், இவ்வாறான காரணிகளைக் கூறி, இலங்கைக்கான பொருளாதார உதவிகளை நிறுத்த எடுக்கும் முயற்சியாகத் தென்படுவதாகவும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் பேராசிரியர் பிரதீபா மஹாநாமஹேவா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# வலுவான இறுதி வரைபு வரும்

இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில் பதில் உயர்ஸ்தானிகர் மூலமாக வாசிக்கப்பட்ட அறிக்கையும், விவாதத்தில் தமது நிலைப்பாடுகளை முன்வைத்த பல்வேறு நாடுகளின் கருத்துகளும் இலங்கையின் பொறுப்புக்கூறலை வலுப்படுத்தும் விதமாக அமைந்துள்ளது. இதனை நாம் வரவேட்கின்றோம்.

அத்துடன் இந்தியாவின் அறிவிப்பும் ஆரோக்கியமானதாக அமைந்துள்ளது. எனவே உறுப்பு நாடுகளின் காத்திரமான நிலைப்பாட்டுக்கு அமைவாகவே இறுதி வரைபு உருவாக்கப்படும் என உறுதியாக நம்ப முடியும். இம்முறை வரைபு உறுதியானதாகவும், அழுத்தமானதாகவும் அமையும் என நம்புவதாக அவர் தெரிவித்தார்.

இறுதி வரைபை வலுப்படுத்தும் விதமாக தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சகல தரப்புடனும் கலந்துரையாடி உரிய ஆதாரங்களை பெற்றுக்கொடுக்கும் அதேவேலை, சர்வதேச நாடுகளுடன் தொடர்ச்சியாக முன்னெடுக்கும் கலந்துரையாடலின் மூலமாக பிரேரணையை வலுப்படுத்துவோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# மகா ராணிக்காக 19 விசேட விடுமுறை

இதன் காரணமாக அன்றைய தினம் விசேட விடுமுறையாக அறிவிக்கப்பட்டாலும் வங்கி மற்றும் வர்த்தக விடுமுறையாக அறிவிக்கப்படவில்லை எனவும் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் கே.மாயாதுன்னே அறிவித்துள்ளார்.

இதேவேளை, எதிர்வரும் 19ஆம் திகதியன்று லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் நடைபெறும் எலிசபெத் மகாராணியின் இறுதிச் சடங்குகளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொள்ள உள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு, முன்னர் அறிவித்திருந்தது.

கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயத்துக்கு 11ஆம் திகதி முற்பகல் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.



# தனி நபருக்கு ரூ.13,138 தேவை

அத்தியாவசிய பொருட்களின் திடீர் விலையேற்றம், பொருட்களை பெற்றுக்கொள்வதில் உள்ள சிக்கல் நிலைமைகள் உள்ளிட்ட காரணிகள் தாக்கத்தை செலுத்தியுள்ளதாகவும், விலையேற்றம் மற்றும் தட்டுப்பாடுகள் காரணமாக பொதுமக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அசாதாரமனான விலை உயர்வுகள் காரணமாக மக்களால் சாதாரண வாழ்க்கை முறையை வாழ முடியாதுள்ளதாகவும், சமூகத்தில் இது வெவ்வேறு விதங்களில் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

# அரசாங்கத்தின் நிலைப்பாடு

ஆகவே, ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டையே வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி இம்முறை ஜெனிவா கூட்டத்தொடரில் முன்வைத்தார் என அரசாங்கம் தெரிவித்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று (13) அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற போதே அமைச்சர்களான ரொமேஷ் பத்திரண மற்றும் சாந்த பண்டார ஆகியோர் இவ்வாறு தெரிவித்தனர்.

மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருவதை அவதானிக்க முடியும், ஆனால் எமது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைத்துளோம். பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டுவந்து மனிதாபிமான நகர்வுகளை முன்னெடுத்த எமக்கு தொடர்ச்சியாக தேசிய சர்வதேச தரப்புகள் குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது கவலைக்குரிய விடயமாகும். எனினும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வெளிவிவகாரத்துறை அமைச்சர் தெளிவாக முன்வைத்துள்ளார் எனவும் தெரிவித்தனர்.

# இந்தியா, சீனா ஜப்பானுடன் பேச்சுவார்த்தைகள் ஆரம்பம்

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் நேற்று (13) அவர் இதனைத் தெரிவித்தார். நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை, கடன் நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை நாடியுள்ளது. அரசாங்கத்தின் சுமார் 85 பில்லியன் டொலர் முதல் 100 பில்லியன் டொலர் வரையான கடன் மறுசீரமைக்கும் செயல்முறையின் மூலம் அரசாங்கத்திற்கு வழிகாட்ட, சர்வதேச சட்டத்தரணிகளான கிளிஃபர்ட் சான்ஸுடன் இணைந்து லசார்ட் ஆலோசனைக்குழு கடந்த மே மாதம் பணியமர்த்தப்பட்டது.

இந்த மாத தொடக்கத்தில், சுமார் 2.9 பில்லியன் அமெரிக்க டொலர் கடனுக்காக இலங்கையுடன் இணக்கம் கண்டதாக சர்வதேச நாணய நிதியம் கூறியது. எனினும், இந்த கடன் திட்டத்தை செயற்படுத்த, இலங்கையின் மூன்று முக்கிய சர்வதேச கடன் கொடுநர்களான சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் நாடுகளிடம் இருந்து கடன் நிவாரணம் தேவைப்படும். இதற்காக லசார்ட் ஆலோசனை குழு இந்தியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுடன் பேசும் பணியில் ஈடுபட்டுள்ளது. இதனூடாக நாங்கள் ஒரு உடன்படிக்கைக்கு வர முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

# பன்னாட்டு குற்றமாகும்

அப்போராட்டத்தில் மனித செயற்பாட்டாளர் கணேஷ் மேலும் உரையாற்றுகையில், “ இலங்கையில் 60க்கும் மேற்பட்ட வருடங்களாக இனவழிப்பு செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றன. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது. ஆனால், 1950 ஆம் ஆண்டு சிங்கள பேரினவாதம் இந்த சிங்கள ஆக்கிரமிப்பை தென் தமிழீழத்தில் முதலாவதாக மேற்கொண்டது.

“குறிப்பாக அம்பாறை மாவட்டத்திலேயே குடியேற்ற திட்டத்தை ஆரம்பத்தில் மேற்கொண்டது. அங்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ஏக்கர் காணிகள் சூறையாடப்பட்டன. புதிதாக ஐம்பது குடியேற்ற கிராமங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. ஒட்டுமொத்தமாக சிறுபான்மைக்கு எதிராக அந்த நடவடிக்கை முதல் முதலிலேயே அரங்கேறியது.

“ 1911ஆம் ஆண்டு அம்பாறை மாவட்ட சனத்தொகை எடுத்துக் கொண்டால், ஏழு சதவீதமாக இருந்த சிங்களவர் இன்று 39 சதவிதமாக அதிகரித்து இருக்கின்றனர். அன்று 24 சதவீதமாக இருந்த தமிழர்கள், இன்று 18 சதவீதமாக குறைந்து இருக்கின்றார்கள்.

“1956 ஆம் ஆண்டு தமிழ் மொழியை இல்லாத ஒழிக்க வேண்டும் என்று மொழிப் பிரச்சினை கொண்டு வரப்பட்டது.

“வடக்கு, கிழக்கில் பல ஆயிரம் படுகொலைகள் இடம் பெற்றன. யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது. வட, கிழக்கு தமிழர் தாயகம் மண் இல்லாத ஒழிக்கப்பட வேண்டும் என்று முல்லைத்தீவு, திருகோணமலை மாவட்ட எல்லை கிராமங்களில் திட்டமிட்டு, சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன.

“2009இல் முள்ளிவாய்க்காலில் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள். இதுவரைக்கும் அவர்களுக்கு நீதி இல்லை. வடபுலத்திலே தாய்மார்கள் 2,000 நாட்களாக போராடி வருகிறார்கள். இதுவரைக்கும் எந்தத் தீர்வும் கிடைக்கப்பெறவில்லை.

“சிங்கள பேரினவாதம் எமக்கு தீர்வு தரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சர்வதேசம் ஒன்று தான் எமக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும்” என்றார்.

# 10,000 ஹோட்டல்கள் மூடப்பட்டன

இவை தவிர, கோதுமை மா, முட்டை, இறைச்சி மற்றும் மீன் காரணமாக நாடு முழுவதும் உள்ள அரச நிறுவனங்களில் 3,000 சிற்றுண்டிச்சாலைகளும் 4,600 பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளும் மூடப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும், மேற்குறிப்பிட்ட பொருட்களின் தட்டுப்பாடு காரணமாக நிகழ்வுகளுக்கான (திருமண வீடுகள், மரண வீடுகள்) உணவு மற்றும் பான விநியோக சேவைகள் கிட்டத்தட்ட முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

உணவு வகைகளின் விலை உயர்வும் இந்த நிலைக்கு மற்றொரு முக்கிய காரணம் என்று தெரிவித்த அவர், கேக், புடிங், வட்டிலப்பம் போன்றவற்றை வீட்டில் தயாரிக்கும் சுமார் 60,000 பேர் முட்டை மற்றும் கோதுமை மா தட்டுப்பாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றார்.

சம்பாதிப்பதை விட உணவுக்காக அதிக பணத்தை செலவிட வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டிய அவர், வர்த்தக மாஃபியாவிலிருந்து நுகர்வோரை பாதுகாக்க நுகர்வோர் சட்டம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

# ஆஜராக அழைப்பாணை பிறப்பிப்பதா? இல்லையா?

சட்டத்தரணி பியல் சிறிசேன மற்றும் பொலன்னறுவை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி விஜித குமார ஆகியோரால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சட்டமா அதிபர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த ஆகியோர் மனுக்களில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 23 ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த காலப்பகுதியில், பொதுஜன பெரமுன கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய சனத் நிஷாந்த, இலங்கையின் நீதித்துறை தொடர்பாக, குறிப்பாக நீதித்துறை அதிகாரிகள் தொடர்பில் சில கருத்துக்களை வெளியிட்டதாக மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரசியலமைப்பின் 105(3) சரத்தின் பிரகாரம் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக சனத் நிஷாந்த எம்.பியை தண்டிக்க உத்தரவிடுமாறு மனுதாரர்கள், கோரிக்கை விடுத்துள்ளனர்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் பிரதிவாதிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவதற்கு சட்டமா அதிபருக்கு உத்தரவிடுமாறும், சம்பந்தப்பட்ட எம். பியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்குமாறும் மனுவில் கோரப்பட்டுள்ளது.

# இலங்கைக்கான பொருளாதார உதவிகளை தடுக்க முயற்சி

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் பதில் ஆணையாளரினால் வாசிக்கப்பட்ட அறிக்கையில் வழமைபோன்று சர்வதேச விசாரணைகளை வலியுறுத்திய காரணிகள் உள்வாங்கப்பட்டுள்ளன. உள்ளக பொறிமுறையை தடுக்கும் அல்லது அதற்கு இடமளிக்காத வகையிலேயே இதுவும் அமைத்துள்ளது. அதனையும் தாண்டி பொருளாதார குற்றங்கள் என்ற ஒரு விடயத்தை புதிதாக உள்ளடக்கியுள்ளனர். பொருளாதார குற்றங்கள் குறித்து கதைக்கும் சட்டபூர்வமான அதிகாரம் இந்த ஆணைக்குழுவிற்கு எவ்வாறு வழங்கப்பட்டது என்ற கேள்வி எழுகின்றது. ஆகவே இது குறித்து வெளிவிவகாரத்துறை அமைச்சு கவனம் செலுத்தியாக வேண்டும். இவ்வாறான விடயங்களை கூறி இலங்கைக்கான பொருளாதார உதவிகளை நிறுத்த எடுக்கும் முயற்சியாக வெளிப்படுகின்றது.

பேரவையில் வெளிவிவகாரத்துறை அமைச்சரினால் வெளிப்படுத்தப்பட்ட இலங்கையின் நிலைப்பாடு சரியானது, 46/1 பிரேரணையை முழுமையாக நிராகரித்து இலங்கையின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தியமை ஆரோக்கியமானது. அதேபோல் தேசிய ரீதியில் முன்னெடுக்கும் வேலைத்திட்டம் என்ன என்பதையும் அரசாங்கம் தெளிவாக முன்வைத்தால் சர்வதேச நாடுகளின் ஆதரவை பெற்றுக்கொள்ள வாய்ப்பாக அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

# அரசியல்வாதிகளை மகிழ்விக்க அதிக அமைச்சர்கள் நியமனம்

திறமையின்மை அடிப்படையில் அரச ஊழியர்களின் எண்ணிக்கையை குறைக்க முன்வந்த ஜனாதிபதி, அதிக எண்ணிக்கையிலான அமைச்சர்களை நியமிப்பதற்கு எவ்வாறு அனுமதியளித்தார் எனவும் கேள்வி எழுப்பியுள்ளது.

அமைச்சர்கள் தங்களுக்கு உரிய சம்பளத்தை மாத்திரமே ஏற்றுக்கொள்வார்கள் என அரசாங்கத்தின் பிரதம கொறடா தெரிவித்துள்ள போதும் அதனை நிறைவேற்றுவது கடினமான விடயம் என அமைச்சர்கள் பலர் தெரிவித்துள்ளதாக பஃப்ரல் சுட்டிக்காட்டியுள்ளது.

அமைச்சர் ஒருவருக்கு 15க்கும் மிகாத தனிப்பட்ட அதிகாரிகள் இருக்கவேண்டும் மற்றும் ஊழியர்களுக்கு 6 வாகனங்களும் ஒவ்வொரு வாகனத்துக்கும் 600 லீற்றர் டீசல், 750 லீற்றர் பெற்றோல் என்பன வழங்கப்படும் என்று ஜனாதிபதியின் செயலாளர் சுற்றறிக்கை விடுத்துள்ளார்.

குறித்த சுற்றறிக்கை மூலம் அமைச்சர் மற்றும் ஊழியர்களின் தொடர்பாடல் செலவை அரசாங்கம் ஏற்கும் என்பதுடன், குறிப்பிட்ட அளவுக்கு அமைச்சர்களின் சிறப்புரிமைகளை மட்டுப்படுத்தியுள்ளதாக பஃப்ரல் கோடி காட்டியுள்ளது.

ஊழல் குற்றவாளிகளை அமைச்சரவைக்கு நியமித்ததையும் கண்டித்துள்ள பஃப்ரல், அதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவிக்கும் செய்தி குறித்தும் கேள்வி எழுப்பியுள்ளது.

பொது மக்கள் பிரதிநிதிகளின் செயற்திறனை அளவிடுவதற்கான அமைப்பு ஒன்றை உருவாக்குவதில் கவனம் செலுத்துமாறு அந்த அமைப்பு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடும் உணவுப் பஞ்சத்தால்

# 63 மில்லியன் மக்களின் நிலைமை மோசமடையும்

மிக மோசமான விவசாய உற்பத்தி, விலை உயர்வு மற்றும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இலங்கையில் உணவு நெருக்கடி மோசமடையக்கூடும் என ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (FAO) மற்றும் ஐக்கிய நாடுகளின் உலக உணவு திட்டம் (WFP) என்பன தமது புதிய அறிக்கையில் எச்சரித்துள்ளன. இலங்கையில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்ளும் 6.3 மில்லியன் மக்களுக்கு போதுமான உயிர்காக்கும் உதவியும் வாழ்வாதார ஆதரவும் வழங்கப்படாவிட்டால் அவர்களின் நிலைமை மோசமடையும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதான இரண்டு பருவங்களில் மோசமான விளைச்சல் காரணமாக, 50 சதவிகிதம் உணவு உற்பத்தி வீழ்ச்சிக்கு வழிவகுத்துள்ளது. அன்னியச் செலாவணிக் கட்டுப்பாடுகள் காரணமாக, தானியங்களின் இறக்குமதி குறைவடைந்துள்ளது எனவும் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், உடனடி உணவு உதவி மற்றும் வாழ்வாதாரத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும், குடும்பங்கள் சத்தான உணவை, குறிப்பாக மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பற்றவைகளை அணுகுவதற்கு முக்கியமானவை.

மக்கள் தொகையில் 30 சதவீதம் பேர் விவசாயத்தை நம்பியிருப்பதால், விவசாயிகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது முக்கியம் எனவும், 2022 ஒக்டோபர் முதல் 2023 பெப்ரவரி வரை முக்கிய உணவுகளான நெல், அரிசி உட்பட்டவற்றின் தற்போதைய நெருக்கடி தொடரும் என எதிர்பார்ப்பதாகவும், உணவு பாதுகாப்பு நிலைமைகள் மேலும் மோசமடைவதைத் தடுக்கவும், விவசாய உற்பத்தியை மீட்டெடுபதற்கும், சிறு விவசாயிகளை இலக்காகக் கொண்ட வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட வேண்டும் எனவும் குறித்த இரண்டு நிறுவனங்களின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# பொதுஜன பெரமுனவுக்கு ரணிலே பொருத்தமான தலைவர்

பா.நிரோஸ்



ஐக்கிய தேசிய கட்சியை விட, பொதுஜன பெரமுனவுக்குப் பொருத்தமான தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே எனத் தெரிவிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர, ஐ.தே.கவின் உறுப்பினர் முகத்தில் ரணிலால் எவ்வாறு முழிக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். ஐக்கிய தேசிய கட்சியின் பிரபல அரசியல்வாதியான தொடாங்கொட கொலை குற்றச்சாட்டில், குற்றம் நிரூபிக்கப்பட்டு ஆயுட்கால சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்த பாராளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகரவுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியை ஐ.தே.கவின் தலைவரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள்ளார். எப்படி ரணிலால் ஐ.தே.கவின் உறுப்பினர்களின் முகத்தில் முழிக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

ரணில் விக்கிரமசிங்க சரியான இடத்தில் தற்போதே வீழ்ந்துள்ளார். ஐ.தே.கவை விட பொதுஜன பெரமுனவுக்கு ரணிலே பொருத்தமான தலைவர். ரணிலால் கட்டியெழுப்பக்கூடிய நிலையில் நாடு இல்லை. ரணிலால் இந்நாட்டைக் கட்டியெழுப்பவும் முடியாது எனவும் தெரிவித்தார்.

பிரித்தானிய இளவரசியின் இறுதிச் சடங்கில் ரணில் கலந்து கொள்வது பெரிய விடயமல்ல. நாட்டை இந்நிலைக்கு தள்ளிய ரணில் போன்றவர்களை அரச குடும்பம் கண்டுக்கொள்ளாது எனவும் கூறினார்.

# கொரிய நாட்டில் அதிக தொழில்வாய்ப்பு

## மொழிப்புலமை அவசியமில்லை

மஹேஸ்வரி விஜயனந்தன்

கொரிய நாட்டில் இரும்புத்துறையடன் சார்ந்த 'வெல்டிங்' மற்றும் 'கிரைண்டிங்' போன்ற துறைகளுக்கு நிறைய வேலை வாய்ப்புகள் இருப்பதாகத் தெரிவித்த ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, இதற்கு கொரிய மொழிப்புலமை இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (13) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், இதற்கு NVQ சான்றிதழ் தேவையில்லை. 45 வயதுக்கு மேற்படாதவர்கள், இத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு பணியகத்தின் கீழ், நாவலயில் உள்ள அலுவலகத்தில் இது தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

இந்த வேலைகளுக்கான சம்பளம் 8 இலட்ச ரூபாயிலிருந்து ஆரம்பமாவதாகவும் இது தொடர்பில் எவரேனும் ஆர்வமுடையவர்கள் இருப்பின், சம்பந்தப்பட்டவர்கள் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புக்காக செல்லும் போது, அவர்களுக்கு அரச வங்கிகள் மூலம் கடன் வழங்கும் வேலைத்திட்டம் உள்ளதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஜப்பானிய அரசாங்கத்தின் கீழ் தாதியர்களுக்கு நிறைய வேலைகள் உள்ளதாகவும், கட்டுமானம் மற்றும் ஏனைய துறைகளுக்கான வேலை வாய்ப்புகளைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருவதாகவும், இலங்கையர்களுக்கு எந்தவொரு நாட்டிலிருந்தும் வேலை செய்வதற்கான விசா மறுக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# மனித உரிமைகள் மீறல்களால் ஐ.எம்.எப் உதவியில் சிக்கல்

பா.நிரோஸ்



ஐ.நா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் அதன் பின்னரான மனித உரிமைகள் மீறல் செயற்பாடுகள் தொடர்பில் பேசப்பட்டுள்ளதால், சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் உதவியைப் பெறுவதில் அரசாங்கத்துக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவை மக்கள் விரட்டியடித்திருந்தாலும், மொட்டுக் கட்சியின் தலைமையகத்தில் இருந்துகொண்டு, அரசாங்கத்தை அவரே இயக்குகிறார்.

போராட்டங்களின் ஊடாக நாட்டு மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல் கலாசாரம், அரசியல்வாதிகளை மீள கொண்டுவர நினைத்தால், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்களில் இறங்குவோம் எனவும் எச்சரித்தார்.

# மகாராணிக்கு ரிஷாட் இரங்கல்



பிரிட்டனின் இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் முகமாக, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், கொழும்பில் உள்ள இங்கிலாந்து உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ இல்லத்துக்கு நேற்று (13) சென்று, அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு, தனது அனுதாபத்தை வெளிப்படுத்தினார்.

# பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு தேசிய பாதுகாப்பு அவசியம்

தேசிய பாதுகாப்பு, அரசியல் ஸ்திரத்தன்மை, சட்டம் மற்றும் ஒழுங்கைப் பேணுவதன் மூலம், பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய வேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன் தெரிவித்தார்.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னகோன், கொழும்பில் உள்ள அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய வளாகத்தில் அமைந்துள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சில் தனது கடமைகளை



திங்கட்கிழமை (12) பொறுப்பேற்றுக் கொண்டார்.

தேசிய தேவையை நிறைவேற்றுவதற்காக, ஜனாதிபதியால் தனக்கு வழங்கப்பட்டுள்ள கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு தன்னால் முடியுமான அர்ப்பணிப்புக்களை மேற்கொள்ளவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேசிய பாதுகாப்பு, அரசியல் ஸ்திரத்தன்மை, சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டுவதன் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மையை அடைய முடியும் என்று தெரிவித்த அமைச்சர், பொது மக்கள் நிலைமையை கருத்தில் கொண்டு சகிப்புத்தன்மையுடன் இருக்குமாறு கேட்டுக்கொண்டார்.

கொக்கட்டிச்சோலையில்

# ஏர்பூட்டு விழா

வா.கிருஸ்ணா





கிழக்கு மாகாணத்தில் விவசாயத்தை மேற்கொள்வோர் பண்டைய காலம் தொடக்கம் முன்னெடுக்கும் ஏர்பூட்டு விழா, மட்டக்களப்பு -கொக்கட்டிச்சோலையில் நேற்று (13) நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவிலின் ஏற்பாட்டில், கொக்கட்டிச்சோலையில் உள்ள வயல் பகுதியில் நேற்றுக் காலை இந்நிகழ்வு நடைபெற்றது.

கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் தேர் உற்சவம் நிறைவடைந்ததும் மழைபெய்யும் என்றும் அக்காலப்பகுதியில் விவசாயிகள் தங்களது வயல் நிலங்களில் விதைப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதும் காலம்காலமாக நடைபெற்று வருகின்றது.

இக்காலப்பகுதியில் கொக்கட்டிச்சோலையில் ஏர்பூட்டப்பட்டதை தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் விவசாயிகள் தமது நெற்செய்கையை ஆரம்பிப்பர்.

இவ்வாறான நடைமுறைகள் யுத்த காலத்தில் இல்லாமல்போயிருந்த நிலையில், மீண்டும் இந்தப் பண்டைய நடைமுறை கொண்டுவரப்பட்டு, அது தொடர்பான நிகழ்வுகள், கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் கோவிலின் ஏற்பாட்டில் நடைபெற்று வருகின்றன.

தான்தோன்றீஸ்வரர் கோவிலின் பிரதமகுரு சிவஸ்ரீ மு.கு.சச்சிதானந்த குருக்களின் தலைமையில், விசேட பூஜைகள் நடைபெற்று, ஏர்பூட்டி உழும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கோவில் நிர்வாக சபையினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் உட்பட விவசாயிகள் பலரும் கலந்துகொண்டனர்.

எமது பாரம்பரியங்கள் தொடர்ந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக எருதைக்கொண்டு இந்த ஏர்பூட்டும் நிகழ்வை நடத்துவதாக இங்கு கருத்து தெரிவித்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

அரச சேவையில் ஆட்சேர்ப்பு

# மீளாய்வு செய்வதற்கு குழு நியமிக்க அனுமதி

அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் தொடர்பாக முன்னுரிமைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான கால அட்டவணையை அறிமுகப்படுத்தவும், தற்போது அரச சேவையில் மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குப் பொருத்தமான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கும் பிரதமரின் செயலாளர் தலைமையில் உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

தற்போது காணப்படுகின்ற பொருளாதார நிலைமையின் கீழ், அரச சேவைக்கான ஆட்சேர்ப்பு தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்நிலையில், சேவை யாப்பு மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கிகரிக்கப்பட்ட பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு நேரிட்டுள்ளது.

அங்கிகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறைகளைக் கையாண்ட போதும், கடந்தகால அரசாங்கங்களால் எடுக்கப்பட்ட கொள்கைத் தீர்மானத்தின் பிரகாரமும் அடிக்கடி பட்டதாரிகள் மற்றும் ஏனைய ஊழியர்கள் நேரடியாக அரச சேவையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர்.

ஒட்டுமொத்தமாக அரச சேவை மிகையாக காணப்பட்டாலும் சேவைப் பிரிவுகளில் வெற்றிடங்கள் காணப்படுவதாக பதிவாகியுள்ளது.

அதேபோல், ஆட்சேர்ப்பின் போது பல்வேறு முறைகளைக் கடைப்பிடிக்கின்றமையின் விளைவாக, அரச சேவையில் மேலெழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பாக பொருத்தமான படிமுறைகளை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

அதற்கமைய, மேற்குறிப்பிட்ட விடயங்களை மீளாய்வு செய்து, அரச சேவையை மிகவும் வினைத்திறனாகவும், பயன்வாய்ந்ததாகவும் முன்கொண்டு செல்ல வேண்டி ஏற்பட்டுள்ளது.

அத்தியாவசிய ஆட்சேர்ப்புகள் தொடர்பாக முன்னுரிமைகளை அடையாளம் கண்டு அவற்றுக்கான கால அட்டவணையை அறிமுகப்படுத்தவும், தற்போது அரச சேவையில் மேலெழுந்துள்ள பிரச்சினைகளுக்குப் பொருத்தமான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு, பிரதமரின் செயலாளர் தலைமையில் உத்தியோகத்தர் குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக்காலத்தை

# ஒரு வருடம் வரை நீடிக்க சந்தர்ப்பம்

ஆறு மாதங்களுக்கு மாத்திரம் வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலத்தை ஒரு வருடம் வரை நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த சலுகையை பெற்றுக்கொள்ள வாகன சாரதிகள், தத்தமது மாவட்ட செயலகத்திற்கோ அல்லது வேரஹெர அலுவலகத்திற்கோ செல்ல வேண்டியது கட்டாயமானது என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதனூடாக 6 மாதங்களுக்காக வழங்கப்பட்ட வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களின் செல்லுபடிக் காலத்தை ஒரு வருடம் வரை நீடித்துக்கொள்ள முடியுமென திணைக்களம் கூறியுள்ளது.

இதனிடையே, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திடம் தற்போதுள்ள சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளை, வெளிநாடுகளுக்கு செல்வோருக்கு மாத்திரம் வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்த சில வாரங்களில் 4, 50,000 அட்டைகள் அச்சடிக்கப்படுமென மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

அவுஸ்திரேலிய நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப்பட்டுள்ள முற்பதிவிற்கு அமைவாக, அட்டைகள் அச்சடிக்கப்படவுள்ளதாகவும் திணைக்களம் கூறியுள்ளது.

தம்பலகாமத்தில்

# நெல் அறுவடையில் பாரிய நட்டம்

■ ஹஸ்பர்

திருகோணாமலை, தம்பலகமம், பட்டிமேடு, பிச்சவெளி விவசாய கண்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், சிறு போக வேளாண்மை அறுவடையில் பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

பிச்சைவெளி விவசாய கண்டத்தில் சுமார் 425 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் வேளாண்மை செய்கை இம்முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த போகங்களில் ஏக்கர் ஒன்றுக்கு 40-50 மூடை விளைச்சல் கிடைத்தது. எனினும், இந்தச் சிறுபோகத்தில் ஓர் ஏக்கருக்கு 15 -18 மூடைகளே கிடைக்கின்றன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



"இச்சிறுபோகத்தில் போதிய அளவு விளைச்சல் கிடைக்கவில்லை, காரணம் கிருமிநாசினி மற்றும் பசளை கிடைக்காமை, உரிய நேரத்துக்கு பசளை கிருமி நாசினிகள் விசிறப்படாமை ஆகும்" எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

"டீசலைப் பெற்றுக் கொள்வதில் மிகவும் கஷ்டம். வேளாண்மை அறுவடைக் கூலியும் அதிகம்; 20,000 ரூபாய் எடுக்கிறார்கள். இம்முறை பாரிய நட்டம் ஏற்பட்டுள்ளது" எனவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

"இச்சிறு போகத்தில் வேளாண்மை செய்தவர்கள் பணம் உள்ளவர்கள் சிலர் 40 ஆயிரம் ரூபாய் கொடுத்து யூரியா பசளை விசிறினர். பணம் இல்லாதவர்கள் விசிறவில்லை.

"அடுத்த போகத்திலாவது எமது வேளாண்மைச் செய்கைக்குத் தேவையான பசளை மற்றும் கிருமி நாசினிகளை உரிய நேரத்துக்கு தந்துதவுமாறு" தம்பலகமம் விவசாயிகள் வேண்டிக் கொள்கின்றனர்.

வெளிவிவகார அமைச்சரின் கருத்துக்கு

# உறவுகள் கடும் கண்டனம்

### சர்வதேச விசாரணையை வலியுறுத்தல்

■ சண்முகம் தவசீலன்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் ஆரம்பமான நிலையில், அங்கு கருத்துத் தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியின் கருத்துக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கடும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு, தமக்கு சர்வதேச விசாரணையே தேவை எனவும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.




முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ளவர்களின் உறவுகள் சங்க தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி, செயலாளர் பிரபாகரன் றஞ்சனா ஆகியோர், முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று (13) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தனர். அவர்கள் மேலும் கருத்துரைக்கையில்,

"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான விடயத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடயம் தொடர்பில் சர்வதேச விசாரணையை தொடர்ச்சியாக கோரிவரும் எமக்கு, சர்வதேச விசாரணையை வலியுறுத்தி எந்த விடயமும் முன்வைக்கப்படாமையானது கவலையளிக்கிறது.

"இந்தக் கூட்டத்தொடரில், சர்வதேச விசாரணை தொடர்பான தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டுமென வலியுறுத்துகிறோம்.

"பாதிக்கப்பட்ட தரப்புகளாக நாம் இன்று 13 ஆண்டுகளாக போராடி எந்தத் தீர்வும் இல்லாது, சர்வதேச விசாரணையை வலியுறுத்தி ஆரம்பித்த தொடர்ச்சியான போராட்டம், இன்று 2,015ஆவது நாளாகத் தொடர்கிறது.

"இந்நிலையில், ஜெனீவாவில் கருத்துத் தெரிவித்த இலங்கையின் வெளிவிவகார அமைச்சர், அலி சப்ரியின் கருத்தானது எமது உணர்வுகளைப் புறந்தள்ளி, அரசை பாதுகாப்பதாக அமைந்துள்ளது" என்றனர்.

கலை மன்றங்களை

## பதிவு செய்தலும் புதுப்பித்தலும்

### விண்ணப்பம் கோரல்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலை மன்றங்களை 2023, 2024, 2025ஆம் வருடங்களுக்கு புதிதாகப் பதிவு செய்தல் மற்றும் புதுப்பித்தல் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக, கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் திருமதி சரண்யா சுதர்சன் அறிவித்துள்ளார்.

கலை மன்றங்களை பதிவு செய்வதற்காக பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் 2017ஆம் காலப்பகுதியில் உருவாக்கப்பட்ட 'கலை மன்றங்களை பதிவு செய்வதற்கான விதிமுறைகள்' என்பவற்றுக்கு அமைய வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப படிவத்தை இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்டக் கலாசார உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கலாசார உத்தியோகத்தர்கள், வெளிக்கள வேலைகளில் கலைமன்றங்களை மேற்பார்வை செய்தல், கலைமன்ற உறுப்பினர்களுடனான கலந்துரையாடல் என்பன முன்கூட்டியே தங்களது நிகழ்ச்சி திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.



## கரைவலையில் அதிக கீரி மீன்கள்

கல்முனை கடற்பரப்பில் கடந்த நாள்களில் ஏற்பட்ட சீரற்ற வானிலை காரணமாக, கரைவலை மீன்பிடி மிகவும் பாதிக்கப்பட்டிருந்தது. எனினும், நேற்று முன்தினம் (12) கீரி வகை மீன்கள் அதிகளவில் பிடிக்கப்பட்டமையால் கரைவலை மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இந்தக் கீரி வகை மீன்கள், உள்ளூர் சந்தையில் கிலோ கிராம் ஒன்றுக்கு 600 ரூபாய் 800 ரூபாய்க்கு விற்பனையாகின்றது.

(படங்கள்: எம்.என்.எம் அப்றாஸ்)




## 100ஆவது நாளின் 44 ஆவது நாள்

### கிளிநொச்சியில் போராட்டம்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

வடக்கு, கிழக்கு சிவில் சமூகத்தினரால் முன்னெடுக்கப்படும் 100 நாள் போராட்டத்தின் 44 நாளாவது நாள் போராட்டம், கிளிநொச்சியில் நேற்று (14) இடம்பெற்றது. வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றுத் தர வேண்டும் எனக் கோரிய குறித்த போராட்டம், மன்னார் மாவட்டத்தில் ஆரம்பமாகி, 44ஆவது நாளை கிளிநொச்சி, கோரக்கன்கட்டு பிரதேசத்தில் இடம்பெற்றது. வடக்கு, கிழக்கு சிவில் சமூகத்தினர் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டம், அப்பகுதியில் உள்ள மக்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.



மட்டு. அரசினர் ஆசிரியர் கலாசாலை

## அதிபருக்கு பிரியாவிடை

■ ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை அதிபர் எம்.சி. ஜுனைட், அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உப பீடாதிபதியாக இடமாற்றம் பெற்றுச் செல்வதை முன்னிட்டு, அவருக்கு கலாசாலையில் பிரியாவிடை அளிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் (12) மாலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் உப அதிபர் கலாநிதி எம்.பி. ரவிச்சந்திரா, பிரதி அதிபர் செல்வி சி. மொறின் உட்பட விரிவுரையாளர்கள், நிர்வாக அதிகாரிகள், ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்வித்துறை, சமூக விஞ்ஞானத்துறை, முதல்மொழி, ஆங்கிலத்துறை, விஞ்ஞானத்துறை உள்ளிட்ட அனைத்து ஆசிரிய மாணவர்களும் கலந்துகொண்டு, மாற்றலாகிச் செல்லும் அதிபர் ஜுனைட்டை வாழ்த்தினர்.

அங்கு ஏற்புரையை நிகழ்த்திய அதிபர் ஜுனைட், "இலங்கையிலுள்ள எட்டு ஆசிரியர் கலாசாலைகளிலே மட்டக்களப்பு அரசினர் ஆசிரியர் கலாசாலை, பல சவால்களோடு இயங்கினாலும் இக்கலாசாலை ஆசிரிய மாணவர்களுக்குப் பயிற்சியளிப்பதில் வெற்றி கண்டுள்ளது.

"கொரோனா வைரஸ் தொற்று அலை பரவல் காலத்தில் கூட இந்தக் கலாசாலை மாணவர்களுக்கு கல்வியில் தொய்வு நிலை ஏற்படா வண்ணம் நிகழ்நிலை (சூம் தொழிநுட்ப)க் கல்வி வழங்கப்பட்டது.

காத்தான்குடியில்

## பெண்களுக்கான உள ஆற்றுப்படுத்தல்

### சுய கற்கை நிலையம் திறந்துவைப்பு

■ எம்.எஸ்.எம் நூர்தீன், ஏ.எச்.ஏ. ஹுஸைன்

காத்தான்குடியில் பெண்களுக்கான உள ஆற்றுப்படுத்தல் சுய கற்கை நிலையம் நேற்று செவ்வாய்க்கிழமை (13) திறந்து வைக்கப்பட்டது.

'ஐ வெயார்' எனப்படும் ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தால், நியூசிலாந்து தூதரகத்தின் அனுசரணையுடன், இந்த நிலையம் திறக்கப்பட்டுள்ளது.

ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் தலைவி திருமதி அனீஸா பிர்தௌஸ் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யூ உதய.சிறீதர், நியூசிலாந்து தூதரகத்தின் அதிகாரி பிரட்சில், காத்தாங்குடி ஆதார வைத்தியசாலை அத்தியசகர் டொக்டர் எம்.எஸ்.எம் ஜாபீர் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரதேசத்தில் பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுக்கும் பெண்களை ஆற்றுப்படுத்தும் வகையில், பெண்களுக்கான உள ஆற்றுப்படுத்தல் சுய கற்கை நிலையம் ஆரம்பிக்கப்பட்டதாக திருமதி அனீஸா பிர்தௌஸ் தெரிவித்தார்.

24 வயது வரை பிள்ளைகள் மீது

## பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும்

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 34 பேர் வரையில் தற்கொலை செய்து கொள்கின்றனர் எனக் கடந்தகால ஆய்வுகளில் இனங்காணப்பட்டு இருப்பதாக யாழ். போதனா வைத்திய சாலையின் உளநல வைத்தியர் டொக்கர் சிவதாஸ் தெரிவித்துள்ளார்.

உலக தற்கொலை தடுப்பு தின நிகழ்வு சனிக்கிழமை (10) கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் நடைபெற்றது. குறித்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

"கிளிநொச்சி மாவட்டத்தில் தற்கொலை வீதம் அதிகரித்து காணப்படுகின்றது. தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின்படி, ஒரு இலட்சம் பேருக்கு 14 பேர் தற்கொலை செய்து கொள்கின்றனர்.

ஆனால், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒரு இலட்சம் பேருக்கு 34 பேர் தற்கொலை செய்து கொள்ளும் நிலை காணப்படுகின்றது. அதேபோன்று, கிளிநொச்சி மாவட்டத்தில் குடும்ப வன்முறைகள் ஐம்பது சதவீதமாக அதிகரித்துள்ளது. அதுமட்டுமல்லாது, சிறுவயது கர்ப்பங்களும் அதிகரித்து காணப்படுகின்றன. இள வயதினரே அதிகளவில் தம்முயிரை மாய்த்துக் கொள்கின்றனர். குறிப்பாக, 24 வயது வரை பிள்ளைகள் மீது பெற்றோர்கள் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, மற்றவர்களிடமிருந்து விலகி தனிமையில் இருத்தல், உறவுகளுடனான முரண்பாடு, போதைப்பொருள் மற்றும் மதுபான பாவனை, துஷ்பிரயோகங்கள், மனநோய், பொருளாதார நெருக்கடிகளை கையாளத் தெரியாமை; அதாவது எல்லோருக்கும் பொருளாதார நெருக்கடிகள் உள்ளன. ஆனால், அதைச் சரியான முறையில் கையாளத் தெரியாமை, வேலையின்மை போன்ற காரணங்களால் அநேகர் தம்முயிரை மாய்த்துக் கொள்கின்றனர்" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில், சுவிஸ் நலவாழ்வு மருத்துவத்துறை நிபுணர் அமைப்பின் உறுப்பினரும் மனநல மருத்துவர் மற்றும் ஆலோசகர் கேம நவரஞ்சன் உள்ளிட்டோர் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டு உரையாற்றியதுடன் அவரது மனநல மருத்துவம் தொடர்பான நூல் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

ஜீவன் எம்.பியின் பேச்சை மீறாமல்

# தொழிற்சங்க நடவடிக்கை

ரஞ்சித் ராஜபக்‌ஷ

மஸ்கெலியா பெருந்தோட்ட நிறுவனத்துக்குச் சொந்தமான தேயிலை தோட்டங்களில் தயாரிக்கப்படும் தேயிலை தூளை, தேயிலை ஏலத்திற்கு அனுப்பவிடாமல் தோட்டத் தொழிலாளர்கள் இடையூறுகளை ஏற்படுத்தினர்.

மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனிக்கு சொந்தமான தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்படும் தேயிலைத் தூளை, அந்தந்தத் தோட்டங்களில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களே தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானின் பணிப்புரைக்கு அமைய, தோட்டத் தொழிலாளர்களால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 1,000 ரூபாய் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்குமாறு, அரசாங்கத்திடம் சம்பள நிர்ண சபை சுற்றறிக்கை விடுத்துள்ள போதிலும், மஸ்கெலியா பெருந்தோட்டக் கம்பனி தோட்டத் தொழிலாளர்களுக்கு



அங்கிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்காமல் தலா 40 ரூபாயை மாத்திரமே வழங்கி வருகின்றது.

இது தொடர்பில் மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனியின் உயர் முகாமைத்துவ அதிகாரிகளுடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தொழிற்சங்கங்கள் கலந்துரையாடுவதற்கு அழைப்பு விடுத்த போதிலும் அவர்கள் கலந்துரையாடலுக்கு வராத காரணத்தால், இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் சிரேஷ்ட உப தலைவர் கணபதி கனகராஜ் தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிராந்திய தலைவர்கள் நேற்று (13) மஸ்கெலியா பெருந்தோட்ட கம்பனியின் தேயிலை தோட்டங்களுக்கு விஜயம் செய்து, தொழிற்சங்க நடவடிக்கையை கடுமையாக நடைமுறைப்படுத்துமாறு தோட்டத் தொழிலாளர்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விபத்தே மரணத்துக்கு காரணம்

## பிரேத பரிசோதனையில் உறுதி

ரஞ்சித் ராஜபக்‌ஷ



கொட்டகலை பகுதியில் மர்மமான முறையில் நேற்றுமுன்தினம் (12) உயிரிழந்த இளைஞன், வாகன விபத்தால் உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது.

கொட்டகலை மேபீல்ட் சந்தியில் (12) மர்மமான முறையில் உயிரிழந்த இளைஞன், கல்லீரல் பாதிக்கப்பட்டு வயிற்றில் அதிக இரத்த ஒட்டம் ஏற்பட்டமை காரணமாக உயிரிழந்துள்ளதாக பிரேத பரிசோதனையை மேற்கொண்ட கிளங்கன்-டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலையின் சட்ட வைத்திய நிபுணர் இனோகா ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர் பலாங்கொடையைச் சேர்ந்த 30 வயதுடைய, நதிர சம்பத் எனவும் இவர், தலவாக்கலையில் மீன் சந்தையில் பணிபுரிந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

குடாகம பிரதேசத்தில் தங்கியுள்ள தனது நண்பர்களை சந்திப்பதற்காக குறித்த இளைஞன், டந்து சென்று கொண்டிருந்த போது, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

டொல்பின் வானில் சிக்கிய இளைஞனை, வானில் பயணித்தவர்கள் வெளியே எடுத்து, வீதி ஓரத்தில் போட்டு விட்டு தப்பிச் செல்கின்றமை, அருகில் உள்ள பாதுகாப்பு கமெராவில் பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், வானின் சாரதியை கைதுசெய்வதற்கான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதேவேளை உயிரிழந்த இளைஞனும் அதிகளவான மதுபோதையில் இருந்துள்ளமை பிரேத பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்காக

# நீண்ட நடைபாதை

## சுற்றுலா அமைச்சின் செயலாளர் யோசனை

ஷேன் செனவிரத்ன

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளைக் கவரும் வகையில் கலஹா தொடக்கம் நுவரெலியா வரை 300 கிலோ மீற்றர் நீளமான நடை பாதையை அமைக்க எதிர்பார்த்துள்ளதாக சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சூலானந்த பெரேரா தெரிவித்தார்.

பேராதனை தாவரவியல் பூங்காவின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, நேற்றுமுன்தினம் நான்கு நினைவு முத்திரைகள் மற்றும் முதல் நாள் அட்டை வெளியீட்டு விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட போதே, மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கலஹா பிரதேசத்தில் இருந்து ஆரம்பிக்கும் இந்த நடைபாதை தலவாக்கலை, ஹப்புத்தளை, லிந்துலை, பண்டாரவளை, தெமோதர வரை நீண்டு செல்லும் எனவும் இந்த வசீகரிக்கும் நடைபாதை, உலகின் எந்த நாட்டிலும் காண முடியாத கவர்ச்சிகரமான இயற்கைக்காட்சிகளுடன் சுற்றுலாப் பயணிகளை ஆச்சரியப்படுத்தும் என்றார்.

ஒரு சுற்றுலாப் பயணி இந்தப் பாதையில் ஒரு நாளைக்கு 13 கிலோ மீட்டர் பயணம் செய்யலாம் என்பதுடன், அந்த இடத்தில், தேயிலை தோட்டத்தின் நடுவில் அமைந்துள்ள தேயிலை தோட்ட மேற்பார்வையாளரின் வீட்டில் தங்கும் வசதிகள் வழங்கப்படும்.

சுற்றுலாப் பயணிகள் இப்பகுதியின் கலாசார, மரபு ரீதியான உணவுகளை பெற்றுக்கொள்ள முடியும் என நம்புவதோடு, இந்தப் புதிய அனுபவம் உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் என்றும் செயலாளர் கூறினார்.

# இருபதாயிரம் ரூபாய்க்கு இரட்டைக் கொலை



பாலித ஆரியவன்ஸ

பதுளை, க்ளென்எல்பின் தேயிலை தோட்டத்தில் திங்கட்கிழமை (12) மாலை தாய் மற்றும் மகளைக் கொன்று, மூத்த மகளை படுகாயப்படுத்திய சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் பதுளை, வீரியபுர வீடொன்றில் வைத்து கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

33 வயதான சந்தேகநபர், நேற்று (13) பதுளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது, சந்தேகநபரை இந்த மாதம் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, நீதவான் சுஜித டீ சில்வா உத்தரவிட்டுள்ளார்.

க்ளென்எல்பின் தோட்டத்தைச் சேர்ந்த 83 வயது தாய், 58 வயது மகள் ஆகியோர் கொல்லப்பட்டதுடன், 62 வயது மூத்த மகள் கடும் காயங்களுடன் பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

சந்தேகநபர், மூவரையும் கட்டிலில் தள்ளிவிட்டு, தலையில் உலக்கையால் அடித்தும், கத்தியால் கழுத்தை அறுத்தும், கொலை செய்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர் கொழும்பில் ஓட்டோ சாரதியாக பணிபுரிந்து வந்த நிலையில், எரிபொருள் பிரச்சினை காரணமாக வேலை இழந்து, வீரியபுரவில் உள்ள மனைவியின் வீட்டிற்கு வந்து வேலையில்லாமல் இருந்த வேளையில், இந்தக் குற்றத்தை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இறந்து போன குடும்பத்தவர்கள, சந்தேகநபருக்கு நன்றாக தெரியும் என்பதுடன், அவர் அடிக்கடி அந்த வீட்டுக்குச் சென்றும் வந்துள்ளார்.

உயிரிழந்த மகள் தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிந்து வந்ததுடன், வட்டிக்கு கடன் கொடுப்பதாகவும், சந்தேக நபர் இந்த வீட்டுக்கு அன்றைய தினம் வந்து இருபதாயிரம் ரூபாய் பணம் கேட்டு அப்பெண்ணை துன்புறுத்தியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த தாயார் தனது எழுபதாயிரம் ரூபாய் பெறுமதியான தங்க நகையை கழற்றி, சந்தேகநபரிடம் கொடுத்துள்ளதாக பதுளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் பெண் தெரிவித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனக்கு காயம் ஏற்பட்டிருந்த நிலையில், சந்தேகநபரின் வேண்டுகோளுக்கு அமைய, சந்தேகநபருக்கு தேநீர் தயாரித்து வழங்கியதாகவும் சந்தேக நபர் நீண்டநேரம் வீட்டில் தங்கியிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான 33 வயதுடைய சந்தேகநபரின் வாக்குமூலத்தின்படி, பசறை வீதியின் கனுவ பிரதேசத்தில் உள்ள மதகு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கத்தி மற்றும் சிறிய வாள் என்பன மீட்கப்பட்டன.

மேலும் பதுளை நகரிலுள்ள அடகுக் கடையொன்றில் அடகு வைக்கப்பட்ட நகையையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

25ஆவது தாதியர் குழுவை வழியனுப்பி வைத்த

# ஹட்டன் னைட்டிங்கேள் தாதியர் கல்லூரி



சுதத் எச். எம். ஹேவா

ஹட்டன் நைட்டிங்கேள் தாதியர் கல்லூரியின் 25ஆவது தாதியர் குழுவாக வெளியேறுபவர்களை வழியனுப்பும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இவ்வாறு தாதியர்களாக வெளியேறும் 20 யுவதிகள் தாதியர் பாடசாலையில் 06 மாதங்களும் வைத்தியசாலைகளில் மூன்று மாதங்களும் நடைமுறைப் பயிற்சிகளைப் பெற்றதாக தாதியர் பாடசாலையின் பணிப்பாளர் சுபோதானி தெரிவித்தார்.

இதற்காக, கொழும்பு, கண்டி பிரதேசங்களில் உள்ள ஏழு தனியார் வைத்தியசாலைகளில் தாதியர்கள் பயிற்சி பெற்றனர்.

இந்நிகழ்வில், ஹட்டன் ஸ்ரீ நிக்ரோதாராம விஹாராதி மஹகம விமலநாயக்க தேரர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



# முத்திரை வெளியீட்டு விழா



ஷேன் செனவிரத்ன

பேராதனை தாவரவியல் பூங்காவின் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் செயலாளர் சூலானந்த பெரேரா தலைமையில் நேற்று (12) அமைச்சின் கேட்போர் கூடத்தில் நான்கு நினைவு முத்திரைகள் வெளியிடப்பட்டன.

முத்திரைகளில் பேராதனை தாவரவியல் பூங்கா, குடை மரம், குளம், அதைச் சுற்றியுள்ள நிலப்பரப்பு, கிறிஸ்மஸ் கேக், கிறிஸ்மஸ் மரம், கார்ட்னர் நினைவுச்சின்னம் ஆகியவற்றின் புகைப்படங்கள் முத்திரைகளாக வெளியிடப்பட்டுள்ளன.

# 'பாடசாலை மாணவர்கள் செல்லக்கூடாத இடங்கள்'

## நுவரெலியாவில் கருத்தரங்கு

ரஞ்சித் ராஜபக்‌ஷ



நுவரெலியா வலயக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும் சிங்கள மொழிமூல பாடசாலை மாணவர்களுக்கு 'பொருத்தமற்ற இடம்' என்ற தலைப்பிலான கருத்தரங்கு, நுவரெலியா கிராமிய தேசிய பாடசாலையின் கேட்போர் கூடத்தில் நேற்று (13) நடைபெற்றது.

போதைப்பொருள் மற்றும் பிற சமூக விரோத செயல்களுக்கு அடிமையான உயர்வகுப்பு மாணவர்களின் சதவீதம் அதிகரித்து வருவதால், அந்த மாணவர்களை சரியான பாதையில் வழிநடத்தும் நோக்கத்துடன் இந்தக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கின் பிரதான பேச்சாளராக சிரேஷ்ட பேச்சாளரும், சிறைச்சாலை திணைக்களத்தின் சிரேஷ்ட சிறைச்சாலை அத்தியட்சகருமான ஜெகத் வீரசிங்க கலந்துகொண்டார்.

இதன்போது பாடசாலை மாணவர்கள், வழிதவறி செல்லும் வழிகள் குறித்தும், அந்தக் குழந்தைகளை சரியான பாதைக்கு அழைத்துச் செல்லும் திறன் குறித்தும், போதை பழக்கத்தால் வரும் தண்டனைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

வாயில் பாணைத் திணித்து

# மூதாட்டியின் மோதிரத்தை திருடியவர் கைது

பாலித ஆரியவன்ஸ

80 வயது பெண்ணின் கை, கால்களைக் கட்டி, வாயில் பாண் துண்டொன்றை திணித்து, அப்பெண்ணின் மோதிரத்தை திருடிச் சென்ற இளைஞர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பதுளை- பசறை வீதியில் உள்ள வீடொன்றிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பகல் வேளையில் அத்துமீறி நுழைந்த இளைஞன், 80 வயதுடைய பெண்ணின் கை, கால்களை கட்டிவிட்டு, எழுபதாயிரம் ரூபாய் பெறுமதியான திருமண மோதிரத்தை திருடிச் சென்ற இளைஞன், 6. 323 மில்லி கிராம் ஹெரோயினுடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பிள்ளைகள் வேலைக்குச் சென்ற பின்னர், குறித்த பெண் மாத்திரம் வீட்டில் தனித்திருந்ததாகவும் அன்று வேலைக்குச் சென்ற மகன் மாலையில் வீட்டுக்கு வந்தபோது, தாயின் கைகள் நாற்காலியில் கட்டப்பட்டு, வாயில் பாண் துண்டு திணிக்கப்பட்டுள்ளதை அவதானித்துள்ளார்.

பதுளை, நெலும்கம பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய சந்தேக நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, பதுளை நகரிலுள்ள அடகுக் கடையொன்றில் தங்க மோதிரம் அடகு வைக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

# வாசிக்கும் சமூகத்தை உருவாக்க முயலுவோம்

பாடசாலைகளில் ஒரு வகுப்பிலிருந்து அடுத்த வகுப்புக்கு தரமுயர்த்தப்பட்டதாக முன்னேற்ற அறிக்கை கிடைத்தவுடன், ஊர்களில் தரமுயர்த்தப்பட்ட வகுப்புகளில் படித்த அக்காமார், அண்ணாமார் போன்றோரிடம் இருந்து அவர்கள் படித்த பழைய புத்தகங்களை வாங்கி, படித்தமை பலருக்கும் ஞாபகத்தில் இருக்கும்.

புதிய ஆண்டுக்கான முதலாம் தவணை ஆரம்பிக்கும் முன்னரே, பல அத்தியாயங்களை பலரும் கற்று முடித்திருப்பர்; மேலதிக வகுப்புகளிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கும்.

தற்போதைய சூழ்நிலைகளில், பழைய புத்தகங்களை மட்டுமன்றி, புத்தகங்களையே புரட்டிப் பார்ப்பதே அரிதாக இருக்கின்றது. அந்தளவுக்கு விரல்களுக்குள் எல்லாமே அடங்கிவிட்டன.

'வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்கும்' என்பர். யதார்த்தத்தில் பார்க்குமிடத்து, வாசிப்பு மனிதர்களிடமிருந்து கொஞ்சம், கொஞ்சமாக தூர விலகிச் சென்று கொண்டிருக்கின்றது. ஆகக் குறைந்தது, தினசரி செய்தித் தாள்களைக் கூட வாசிக்கும் பழக்கம், இளம் தலைமுறையினரிடம் குறைந்துவருகின்றது.

தொழில்நுட்ப வளர்ச்சியால், தேவையான அனைத்து விடயங்களும் கைவிரல் நுனிக்கே வந்துவிட்டன. ஆகையால், புத்தகங்களைத் தேடி, பக்கங்களைப் புரட்டி, தேடிக்கொண்டிருக்க வேண்டிய தேவை எவருக்குமே இல்லை. எந்தவொரு சந்தேகத்துக்கான தெளிவையும் விளக்கத்தையும் கையிலிருக்கும் திறன்பேசியின் ஊடாகத் தேடியறிந்து கொள்ளலாம். அந்தளவுக்கு புத்தகவாசிப்பு சுருங்கிவிட்டது.

2004ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல், 'தேசிய வாசிப்பு மாதம்' பிரகடனப்படுத்தப்பட்டு, ஒவ்வோர் ஆண்டும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும். இதையொட்டி பல்வேறு போட்டிகள், நிகழ்வுகள் நடத்தப்படுகின்றது. இது, வரவேற்கப்பட வேண்டிய விடயமாகும்.

கொழும்பில், பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், சர்வதேச புத்தகக் கண்காட்சி, எதிர்வரும் 16ஆம் திகதி முதல் 25ஆம் திகதி வரை, 10 நாள்களுக்கு நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாசிக்கும் பழக்கத்தை சிறுவர்களிடமிருந்து ஆரம்பித்து, வழக்கமாக்கிக் கொள்ளவேண்டும். அலைபேசிகள், திறன்பேசிகளில் பெற்றோர்களுக்கு தெரியாத விடயங்களைக் கூட, ஓரிரு நிமிடங்களுக்குள் சிறார்கள் கண்டுப்பிடித்துவிடுவர். ஆனால், திரையுடன் கூடிய இலத்திரனியல் சாதனங்களை பிள்ளைகள் நீண்ட நேரம் கையாண்டால், அவர்களின் பகுத்தறியும் திறனும் அறிவு வளர்ச்சியும் குறைவடையும் என உடலியல் நிபுணர் கலாநிதி வருண குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கருவிகள் உமிழும் 'ஊதா கதிர் அலை'கள், பிள்ளைகளின் குழந்தைகளின் மூளையின் செயற்பாட்டைப் பாதிப்பதாகக் கூறிய அவர், தூங்கச் செல்வதற்கு ஓரிரண்டு மணி நேரத்திற்கு முன்னர், சிறுவர்களை இதுபோன்ற சாதனங்களிலிருந்து விலக்கி வைப்பது அவசியமென வலியுறுத்தி உள்ளார்.

படுக்கைக்குச் சென்ற பின்னர், புத்தகம் இன்றேல் சிறிய துண்டு பத்திரிக்கையை வாசிக்காவிடின் தூக்கம் வராதென பலரும் இன்னும் கூறுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம்.

எனினும். யதார்த்த நிலைமை என்னவோ ஒரு விரல் நுனிக்குள் சிக்கித்தவிப்பதுடன், மனிதனின் இயக்க செயற்பாட்டுக்கு தடையாகவும் இருக்கிறது. ஆகையால், வாசிப்பை மேம்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பது அத்தியாவசியமாகும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





# வெட்கம் என்றால் 'கிலோ என்ன விலை'?



எம். எஸ். எம் ஐயூப்

இலங்கையின் தலைவர்களின் ஊழல்களும் மோசடிகளும் அடக்குமுறைகளும் என அனைத்தும், சர்வதேச அரங்குகளிலும் இன்று பேசுபொருளாக மாறியுள்ளன. ஆனால், ஆச்சரியமான விடயம் என்னவென்றால், உலகத் தலைவர்கள் இவற்றைப் பற்றிப் பேசுவதை, இலங்கையின் தலைவர்கள் கேட்காததைப் போல் இருப்பதேயாகும்.

இந்தப் பிரச்சினையை, உலகத் தலைவர்கள் எந்தளவு பாரதூரமாகக் கருத்தில் கொண்டு இருக்கிறார்கள் என்றால், இலங்கையின் தலைவர்கள் பொருளாதாரத்தை கையாளும் விதத்தை, ஒரு மனித உரிமை சார்ந்த பிரச்சினையாக, ஐ.நா மனித உரிமைகள் பேரவை கருதுகிறது.

பொருளாதார பிரச்சினையால் தலைதூக்க முடியாமல் இருக்கும் இலங்கையின் விவசாயம், உரத்தட்டுப்பாட்டால் தொடர்ந்து பாதிக்கப்பட்டு வருகிறது. கடந்த வருடம் சிறுபோகம், பெரும் போகம் ஆகிய இரண்டும் உரத்தட்டுப்பாட்டால் வெகுவாக பாதிக்கப்பட்டன. இந்த வருடமும் சிறுபோகம் பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், அரசாங்கம் செய்வதறியாது தவிப்பதைக் கண்ட உலக வங்கி, உரம் கொள்வனவு செய்வதற்காக இலங்கைக்கு 70 மில்லியன் டொலர் (சுமார் 250 கோடி ரூபாய்) வழங்கியது. ஆனால், உலக வங்கி வழங்கிய பணத்தில் 120 கோடி ரூபாய், அரசியல்வாதிகளால் கொள்ளையடிக்கப்பட்டு உள்ளதாக 'கோப்' என்று சுருக்கமாக அழைக்கப்படும் அரச நிறுவனங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் முன்னாள் தவிசாளர் கலாநிதி சரித்த ஹேரத் திங்கட்கிழமை (12) கூறினார்.

அரசியல்வாதிகளினதும் அரச அதிகாரிகளினதும் ஊழல் காரணமாக, தற்போது உலக வங்கி, தாம் உரம் கொள்வனவு செய்வதற்காக வழங்கும் பணம், கடுமையான கண்காணிப்பின் கீழ் கையாளப்பட வேண்டும் எனக் கூறியுள்ளது. அதன்படி, அந்தப் பணம் தொடர்பான கணக்குகளை, தாம் குறிப்பிடும் நிறுவனமொன்றின் மூலம் கணக்காய்வு செய்ய வேண்டும் என்றும் அவ்வங்கி கூறியிருக்கிறது. இது நாட்டுக்கு பெரும் அவமானம் என்பதை எவரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தம்மால் தீர்வு காண முடியாத நிலையிலேயே, கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம், கடந்த மார்ச் மாதம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடியது.

ஆனால், நாணய நிதியம் இது போன்ற நிலைமைகளில், எந்தவொரு நாட்டுக்கும் பெரிதாக நிதி உதவி வழங்குவதில்லை.

அரச செலவைக் குறைத்து, வருமானத்தை அதிகரித்து, கடன்காரர்களிடமும் சில சலுகைகளைப் பெற்றுக் கொடுத்து, மீண்டும் தலைதூக்க உரிய ஆலோசனைகளையும் அவகாசத்தையும் பெற்றுக் கொடுப்பது மட்டுமே நாணய நிதியத்தின் நடவடிக்கைகளாகும். இதற்கிடையே, நீண்ட காலக்கடன் தொகையையும் மிகக்குறைந்த வட்டிக்கு, அது சம்பந்தப்பட்ட நாட்டுக்கு வழங்கும்.

அதன்படி, தற்போது இலங்கைக்கு 2.9 பில்லியன் டொலர் வழங்கவும் அத்தோடு இலங்கையின் வருமானத்தை அதிகரிப்பது எவ்வாறு என்பதைப் பற்றியும் அரச செலவை குறைப்பது எவ்வாறு என்பதைப் பற்றியும், நீண்ட பேச்சுவார்த்தைகளின் பின்னர், நாணய நிதியத்தின் அதிகாரிகளும் இலங்கை அதிகாரிகளும் இணக்கத்துக்கு வந்துள்ளனர்.

இந்தியா, இலங்கைக்கு இந்த வருடத்துக்குள் நான்கு பில்லியன் டொலர் உதவியாக வழங்கி இருக்கிறது. இலங்கை ஒரு வருடத்துக்கு ஆறு பில்லியன் டொலருக்கு மேல், வெளிநாடுகளில் இருந்து பெற்ற கடனை அடைப்பதற்காக செலுத்த வேண்டும். இலங்கை ஒரு வருடத்துக்கு எரிபொருளுக்காக மட்டும், ஐந்தரை பில்லியன் டொலரை செலவிடுகிறது. இவற்றைக் கருத்தில் கொள்ளும்போது, நாணய நிதியம் வழங்கும் 2.9 பில்லியன் டொலரால், என்ன செய்ய முடியும் என்ற கேள்வி எழுகிறது.

நாணய நிதியம், இலங்கையின் அரசியல்வாதிகளினதும் அதிகாரிகளினதும் ஊழல்கள், மோசடிகள் என்பவற்றை நன்றாக அறிந்துள்ளமை, பேச்சுவார்த்தைகளின் போது நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கைகளில் தெளிவாக அறிய முடிகிறது.

கடந்த ஏப்ரல், மே, ஜூன், ஓகஸ்ட் மாதங்களில் நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இலங்கையின் அரச அதிகாரிகளுக்கும் இடையே பேச்சுவாரத்தைகள் இடம்பெற்றன. அந்தப் பேச்சுவார்த்தைகளின் இறுதியில், நாணய நிதியம் வெளியிட்ட அறிக்கைகளில், 'ஊழலுக்கான வாய்ப்புகளைக் குறைத்தல்' தொடர்பாக, விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தலைதூக்க முடியாமல் இருக்கும் இலங்கைக்கு, தலைதூக்க உதவி செய்தால் அதிலும் மோசடி செய்யும் நிலையில், இலங்கையின் அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் இருப்பதாலேயே, நாணய நிதியம் இந்த விடயத்தை அடிக்கடி குறிப்பிடுகிறது.

வெளிநாடுகளிடமிருந்தும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்தும் நன்கொடையாகவோ கடனாகவோ வருமானமாகவோ கிடைக்கும் பணத்தில் பெரும்பகுதியை, நுகர்வுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்காகப் பாவித்தால், எந்தவொரு நாடும் இறுதியில் பெரும் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையை எதிர்நோக்கியே ஆக வேண்டும். கிடைக்கும் வெளிநாட்டுப் பணத்தைப் பாவித்து, ஏற்றுமதி, மறுஏற்றுமதி, உல்லாசப் பிரயாணத்துறை, துறைமுகங்கள், விமான நிலையங்கள் போன்ற சேவைப் பொருளாதாரத்தையும் வளர்த்துக் கொண்டால், செலாவணிப் பிரச்சினையை சமாளிக்க முடியும்.

இது பெரியதொரு பொருளியல் கொள்கை அல்ல. சாதாரண தர வகுப்பில் பொருளியல் படிக்கும் மாணவர்களுக்கும் இது தெரியும். இதனை நடைமுறையில் செய்ய வேண்டியவர்கள் ஆட்சியாளர்களேயாவர். ஆனால், இலங்கையின் அரச தலைவர்கள், இவ்வாறு பொருளாதாரத்தை வழிநடத்தவில்லை. இவ்வளவு பெரிய பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கி இருக்கும் நிலையிலும், அவர்கள் அதைப் பற்றிச் சிந்திக்கவில்லை. இலங்கைக்கு உதவி வழங்கும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்கும், இவர்களைப் பற்றித் தெரியும்.

அதனால் தான், சர்வதேச நாணய நிதியம் தமது உதவியோடு, சில கடும் நிபந்தனைகளை விதிக்கிறது. வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டும்; நலன்புரிச் செலவுகளை குறைக்க வேண்டும்; அரசியல் நோக்கங்களுக்காக, அரச நிறுவனங்களை தமது ஆதரவாளர்களால் நிறைத்துள்ளதால், அவற்றின் ஆளணியைக் குறைக்க வேண்டும்; நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை மூடிவிட வேண்டும் அல்லது தனியார் துறையிடம் கையளிக்க வேண்டும் போன்றன, இந்த ஆலோசனைகளில் அடங்குகின்றன. உண்மையில் இந்த நிபந்தனைகள், அரச தலைவர்களுக்கு எதிரான குற்றப் பத்திரம் போன்றவையாகும்.

"இலங்கையின் தற்போதைய நெருக்கடியானது, மோசமான நிதி முகாமைத்துவத்தின் விளைவாகும்" என, சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, மே மாதம் 26ஆம் திகதி 'என்.டி.ரி.வி' தொலைக்காட்சிக்கு கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கத்தின் திறனற்ற தன்மை காரணமாக உலக வங்கியும் 'இலங்கை அரசாங்கம் வளர்ச்சித் திட்டம் ஒன்றை வகுத்துக் கொள்ளும் வரை, இலங்கைக்கு புதிதாக நிதி உதவி எதுவும் வழங்குவதில்லை' என, மே மாதம் 24ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இதே கருத்தை அவ்வங்கி, ஜூலை 28ஆம் திகதி வெளியிட்ட மற்றுமோர் அறிக்கையிலும் மீண்டும் வலியுறுத்தி இருந்தது. ஏற்கெனவே, இலங்கையில் பல்வேறு திட்டங்களுக்காக அவ்வங்கி ஒதுக்கியிருக்கும் நிதியைத்தான், அத்தியாவசிய தேவைகளுக்காக உபயோகிக்க அவ்வங்கி இப்போது அனுமதி வழங்கியிருக்கிறது.

இந்தப் பின்னணியில் தான், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் திங்கட்கிழமை (12) ஆரம்பமாகியுள்ளது. இலங்கையில் போர் மற்றும் அடக்குமுறைகளின் போது, மனித உரிமைகள் மீறப்பட்டு இருப்பதற்குப் புறம்பாக, மக்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்படுவதையும் அப்பேரவை, மனித உரிமைகள் மீறல்களாகவே இப்போது கருதுகிறது.

இயற்கை அனர்த்தங்கள் காரணமாகவோ கொவிட்-19 பெருந்தொற்று நோயின் காரணமாகவோ அன்றி, ஆட்சியாளர்களின் நிர்வாக முறைகேடு, ஊழல், மோசடி ஆகியவையே, இந்த நிலைமை ஏற்படுவதற்கு பிரதான காரணங்களாக இருக்கின்றன.

இந்த நெருக்கடியைத் தோற்றுவித்த ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளை, மனித உரிமைகள் தொடர்பான ஐ.நா உயர்ஸ்தானிகர் மிச்சல் பச்சலே, 'பொருளாதார குற்றங்கள்' (Economic crimes) என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டு இருக்கிறார். பொருளாதார பாதிப்புகள், மனித உரிமைகள் மீறலாகக் குறிப்பிடப்படும் முதலாவது முறை இதுவாகும்.

இலங்கைக்கு உதவி வழங்கும் அனைத்து சர்வதேச நிறுவனங்களும், தற்போது ஓர் இக்கட்டான நிலைமையை எதிர்நோக்கி இருக்கின்றன. மக்கள் பொருளாதார பிரச்சினைகளால் பாதிக்கப்படும் போது, அவற்றால் உதவி செய்யாதிருக்கவும் முடியாது. தாம் வழங்கும் உதவிப் பணத்தை, அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் கொள்ளையடித்துக் கொள்கிறார்கள். எனவேதான், முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு, அவர்கள் இந்த ஊழல் விடயத்தை, இலங்கையின் தலைவர்களின் முகத்துக்கே கூறி வருகிறார்கள்.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு சனிக்கிழமை (10) இலங்கை வந்த சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க நிறுவனத்தின் (யூஎஸ்எயிட்) நிர்வாகி சமந்தா பவர், ஊடகங்களைச் சந்தித்த போது, இலங்கையில் இடம்பெறம் ஊழல்களை மிக மோசமாகச் சாடினார்.

இவை அவமானத்துக்கான காரணங்களாயினும், இலங்கையில் எவரும் இவற்றைப் பற்றி வெட்கப்படுவதாகத் தெரியவில்லை; அதேபோல், இந்தப் பகற்கொள்ளைகளை நிறுத்தவும் தயாராக இல்லை. இவ்வளவு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தும், ஆட்சியாளர்கள் தமது சகாக்களுக்கு, பொதுச் சொத்தை கொள்ளையடிக்க வாய்ப்பு அளிக்கும் வகையில், மேன்மேலும் அமைச்சர் பதவிகளையும் இராஜாங்க அமைச்சர் பதவிகளையும் வழங்கி வருகிறார்கள்.



## வாழ்வியல் தரிசனம்

மனதை வெல்வதே மகாவீரம். மனம் செல்லும் பாதையில் செல்வது பலவீனத்தைக் குறிக்கின்றது.

சந்தோஷங்களுக்கு மனிதர், தங்களை மறக்கிறார்கள். கவலை வந்ததும் மனம் உடைந்து போகின்றார்கள். எவரும் திடமான மனோ நிலையில் வாழ்வது இல்லை. நெஞ்சத்தைத் தளரவிடுவது, தேகத்தை இம்சை செய்வது போலாகும்.

வாழ்க்கையில் நடப்பவை எல்லாமே நிகழ்வுகள் தான். அவை மாறிமாறி வந்துபோகும். எவருமே தப்பித்துப் போகமுடியாது. எங்களுக்கு மட்டும், எங்களுக்கு வேண்டியபடி, இயற்கை புதிதாக சட்டம் அமைக்காது.

மரணம் மாந்தர்களுக்கு மட்டுமல்ல; சகல உயிர்களுக்கும் பொதுவானது. கடவுள் பேதமறவே உலகை இயக்குகின்றார்.

அறிவு, புத்தியுடன் வாழ்பவர்கள் கூட, மயக்க நிலையில் வாழ்க்கையை நடத்துகிறார்கள். உலகத்துக்குள் நுளைந்தாலே, அது பாரதூரமானது என எண்ணவேண்டாம்.

அனுபவ ஞானம் பெற, காலம் வழிசொல்லும். எனினும், துணிந்தவர்கள் நிம்மதியுடன் வாழ்கின்றனர்; திடமான மனது கொண்டவர்கள் அஞ்சுவில்லை.

– பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாவனைக்கு உதவாத நிலையில் மலசல கூடம்



நெல்லியடி மத்திய பஸ் நிலையத்தில் உள்ள மலசல கூடம் பராமரிப்பின்றி, பாவனைக்கு உதவாத நிலையில் காணப்படுவதால், பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறித்த பஸ் நிலையத்துக்கு, பஸ்களில் நீண்ட தூரத்தில் இருந்து பலர் வருகை தருகின்றனர். மலசல கூடம் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ளமையால், இயற்கை உபாதைகளுக்கு உள்ளாவோர் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

இதேவேளை, பஸ் நிலையத்தில் இரவு வேளையில் கூடும் சிலர், மது அருந்துதல், போதைப்பொருள் பாவனை போன்ற சமூகவிரோத செயற்பாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். அதனால், பஸ் நிலையத்தைச் சூழவுள்ள பகுதிகளிலும் மலசல கூடத்துக்குள்ளும் பியர் ரின்கள், மதுப் போத்தல்கள் காணப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகளால், இரவு வேளைகளில் பஸ்களில் வந்து, பஸ் நிலையத்தில் இறங்கும் பெண்கள் உள்ளிட்டவர்கள், அச்சத்துடனையே செல்கின்றனர்.

எனவே, இது தொடர்பில் இலங்கை போக்குவரத்து சபை, கரவெட்டி பிரதேச சபை போன்ற இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய நிறுவனங்கள் பாரமுகமாக இருக்காது, மலசல கூடத்தைத் தூய்மையாகப் பேணவும் சமூகவிரோத செயற்பாடுகள் இடம்பெறாமல் தடுக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்படும் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கிறார்கள்.

– நிதர்சன் வினோத்




# அமைச்சரவை தீர்மானங்கள் சில...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில், திங்கட்கிழமை (12) கூடிய வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...

### உபகுழுவை நிறுவுதல்

சமகால நெருக்கடியான பொருளாதார நிலைமையில், பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் மேம்பாட்டுக்காக அதிக முன்னுரிமை வழங்கி, மேற்கொள்ள வேண்டிய படிமுறைகள் தொடர்பாக துரிதமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. அதற்கமைய, தேசிய பொருளாதார முகாமைத்துவப் பணிகளுக்குத் தேவையான மூலோபாய ரீதியான வழிகாட்டல்களை வழங்குவதற்காக பொருளாதார மறுமலர்ச்சி மற்றும் மேம்பாடு தொடர்பான அமைச்சரவை உபகுழுவை நிறுவுவது பொருத்தமானதென அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த குழுவானது, ஜனாதிபதியின் தலைமையிலும் மற்றும் பிரதமர் உள்ளிட்ட 05 அமைச்சரவை அமைச்சர்களை நியமிப்பதற்காக அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### தேசிய இலக்கிய கலைப் பெருவிழாவை நடத்துதல்

இலக்கியம், கலை, அழகியல் மற்றும் இவற்றுடன் தொடர்புடைய துறைகளை மேம்படுத்துவதற்காக அரச இலக்கிய விருது விழா, தேசிய இலக்கிய விழா, தேசிய இலக்கிய பெருவிழா வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்றது.

தற்போது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடிகளால் குறித்த விழாக்களை இவ்வாண்டில் நடத்துவது உகந்ததாக அமையாததால், அதற்குப் பதிலாக, குறித்த இலக்கிய விழாவின் அனைத்து தனித்துவமான பண்புகளை உள்ளடக்கிய வகையில் 'தேசிய இலக்கிய கலைப் பெருவிழா' நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, 2022 ஒக்டோபர் 27ஆம் திகதி தொடக்கம் 30ஆம் திகதி வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில், அரசதுறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து, இவ்விழாவை நடத்துவதற்காக புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை உடன்பாடு தெரிவித்துள்ளது.

### சமவாயத்துக்குச் சமர்ப்பித்தல்

ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான வேலைச்சட்டக சமவாயத்துக்கு, சமகால காலநிலை மாற்றங்கள் தொடர்பான தகவல்கள் அடங்கிய அறிக்கையை இலங்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அதற்கமைய, 2000 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் முதலாவது மற்றும் இரண்டாவது தொடர்பாடல் அறிக்கையில் காலநிலை, பொருளாதாரம், சமூகச் சூழல், தேசிய பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றம், குறைப்பு மற்றும் கடந்தகால போக்குகள் பற்றிய தகவல் பட்டியல், பச்சைவீட்டு விளைவு வாயுக்கள் வெளியேற்றத்தைக் குறைக்கின்ற செயற்பாடுகள், காலநிலை மாற்றங்கள் தொடர்பான இடர்கள் மற்றும் அவற்றுக்கு இசைவாக்க நடவடிக்கைகள், கல்வி, பயிற்சி, இயலளவு விருத்தி, தொழில்நுட்ப பரிமாற்றங்கள், ஆய்வுகள், முறைசார்ந்த கண்காணிப்புகள் போன்றன உள்ளடக்கப்படல் வேண்டும்.

அதற்கமைய, காலநிலை மாற்றம் தொடர்பாக நிபுணர் குழு மற்றும் நிறுவனங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் குழுக்களின் கருத்துகளையும் யோசனைகளையும் பெற்றுக் கொண்டு, சுற்றாடல் அமைச்சால் இலங்கையில் காலநிலை மாற்றங்கள் தொடர்பான மூன்றாவது தேசிய தொடர்பாடல்கள் அறிக்கை - 2018-2021 தயாரிக்கப்பட்டுள்ளது. குறித்த அறிக்கை, ஐக்கிய நாடுகள் சபையின் காலநிலை மாற்றங்கள் தொடர்பான வேலைச்சட்டக சமவாயத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### கொள்வனவுக்கு நிதியிடல்

நாடு எதிர்கொண்டுள்ள வெளிநாட்டு செலாவணி நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதற்காக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி நிதியத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கொழும்பு நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்திற்கு ஒத்துழைக்கின்ற கருத்திட்டம் மற்றும் இடர்களைக் குறைக்கின்ற படிமுறைகள் மூலம் மண்சரிவு இடர்களைக் குறைக்கின்ற கருத்திட்டம் போன்ற கருத்திட்டங்களின் விடயதானங்களைத் திருத்தம் செய்து 100 மில்லியன் அமெரிக்க டொலரை துரிதமாக வழங்குவதற்கு அவ்வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கொழும்பு நகர மறுமலர்ச்சி கருத்திட்டத்திற்கு ஒத்துழைக்கின்ற கருத்திட்டத்தின் மூலம் 70 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் இடர்களைக் குறைக்கின்ற படிமுறைகள் மூலம் மண்சரிவு இடர்களைக் குறைக்கின்ற கருத்திட்டத்தின் மூலம் 30 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவுக்குப் பயன்படுத்துவதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### அங்கிகாரத்துக்காகச் சமர்ப்பித்தல்

1969ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்டுள்ள கீழ்க்காணும் ஒழுங்குவிதிகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாட்டு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரான ஜனாதிபதியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

அரச துறையின் இறக்குமதிகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட துறைகளில் நடவடிக்கை ஒத்துழைப்புகளை உறுதிப்படுத்துவதற்காக ஒருசில தொழிற்றுறைகளுக்குத் தேவையான மூலப்பொருட்கள், உபகரணங்கள் மற்றும் பயன்பாட்டு வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு இயலுமாகும் வகையில் 2022.08.23 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்.

நிலவுகின்ற மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு அந்நியச் செலாவணிப் பணத்திரவத்தன்மையை முகாமைத்துவம் செய்வதற்காக இலங்கை மத்திய வங்கி பரிந்துரைகளின் பிரகாரம், தெரிவு செய்யப்பட்டுள்ள பொருட்கள் பலவற்றை இறக்குமதி செய்வதை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு 2022.08.23 திகதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் விதிக்கப்பட்டுள்ள 2022 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்.

புதுடெல்லி

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக

# இந்தியாவுக்கு வல்லமை உண்டு

ஐக்கிய நாடுகள் சபை பாதுகாப்பு கவுன்சிலில் நிரந்தர உறுப்பினராக இருக்கும் வல்லமை இந்தியாவிடம் உள்ளது என வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், சவுதி அரேபியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஜெய்சங்கர், வெளியுறவுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்னர், சவுதி அரேபியாவுக்கு பயணம் மேற்கொள்வது இதுவே முதல் முறையாகும்.

அங்கு அந்நாட்டின் மன்னர் முஹமது பின் சல்மானை சந்தித்து, இரண்டு நாடுகளுக்கு இடையிலான உறவு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இரண்டு நாடுகளும் எரிசக்தி, வர்த்தகம், உட்கட்டமைப்பு திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புக் குறித்து பேசினர்.



இந்நிலையில், இந்தச் சந்திப்புக்குப் பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் ஜெய்சங்கர் பின்வருமாறு கூறினார்: "ஐ.நா சபையின் பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினர் பதவிக்கு இந்தியா தகுதி படைந்த நாடு. தற்போதைய சர்வதேச சூழலில், யதார்த்தத்தை உணர்ந்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் மாற்றங்கள் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.உலகின் மிகப் பெரிய ஜனநாயக நாடாகவும், ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாகவும், அணு ஆயுத சக்தி மிக்க நாடாகவும் தொழில்நுட்ப மைய நாடாவும் திகழும் இந்தியா, ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக இருக்க அனைத்து தகுதியும் பெற்றுள்ளது" என்றார்.

இந்தியா, பாதுகாப்பு கவுன்சிலின் நிரந்தர உறுப்பினராக வருவதால் சர்வதேச பாதுகாப்பு மேம்படுவதுடன், கவுன்சிலின் செயற்பாடும் உறுதி பெறும். ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகள் நிரந்தர உறுப்பினர்களாக உள்ளன. இதில் இந்தியா தற்காலிக உறுப்பினராக தற்போது உள்ள நிலையில், நிரந்தர உறுப்பினராகும் முயற்சியில் சமீப காலமாக தீவிர முனைப்பு காட்டி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

சேலம்

## அ.தி.மு.கவை அழிக்க முயற்சி

'புரட்சி பயணம்' என்ற தலைப்பில் இரண்டு நாள் சுற்றுப் பயணமாக சேலம் மாவட்டத்துக்குச் சென்றிருந்த வி.கே. சசிகலாவுக்கு மாவட்ட எல்லையான தலைவாசலில் அவருடைய ஆதரவாளர்கள் வரவேற்பு அளித்தனர்.

இதனை தொடர்ந்து ஆத்தூர் மணிக்கூட்டு கோபுரத்துக்கு அருகில் வேனில் இருந்தபடியே பொதுமக்களிடையே சசிகலா பேசினார்.

அப்போது, "சேலம் மாவட்டத்தில் மக்களை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. எம்.ஜி.ஆர், ஜெயலலிதா இருந்த அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) ஆட்சிக்காலம் தான் மக்களுக்கான ஆட்சியாக பொற்காலமாக இருந்தது. மேலும் 69% சதவீத இட ஒதுக்கீடு கொண்டு வந்தவர் ஜெயலலிதா. இறுதி மூச்சு வரை மக்களுக்கான திட்டங்களை கொண்டு வந்தார். அ.தி.மு.க ஆட்சிக் காலத்தில் கொண்டு வந்த மக்கள் நலத்திட்டத்தை, தொடர்ந்து செயற்படுத்தினாலே தமிழகம் முன்னேற்றம் பெறும்"



என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "எம்.ஜி.ஆர் மறைவுக்குப் பின்னர் இக்கட்டான சூழ்நிலையில் அ.தி.மு.கவை மீட்டுள்ளோம். எனவே அன்றைய காலத்தில் நடந்ததை நிர்வாகிகள் நினைத்துப் பார்த்தால், தற்போதைய பிரச்சினை சரியாகி விடும். அ.தி.மு.கவை அழிக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. மேலும் 2024இல் நடைபெறும் தேர்தலில் அனைவரும் ஒன்றுபட்டு, சிறப்பான வெற்றி பெறுவோம். என் அக்கா எனதருகிலிருந்து நடப்பவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்" என்றார்.

தெலங்கானா

## அண்ணாமலை தான் கவிழ்க்க போகிறாரா?



சொந்த தொகுதியில் வெற்றி பெற முடியாத அண்ணாமலை தான், ஸ்டாலின் ஆட்சியை கவிழ்க்க போகிறாரா என தெலங்கானா முதலமைச்சர் கேசிஆர் அம்மாநில சட்டமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மஹாராஷ்டிராவில் உத்தவ் தாக்ரேவின் அரசு கவிழ்க்கப்பட்டு அங்கு பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) ஆட்சி அமைத்தது. அப்போது தமிழ்நாட்டிலும் ஓர் ஏக்நாத் ஷிண்டே புறப்படுவார் என தமிழ்நாடு பா.ஜ.க தலைவர் அண்ணாமலை பேசியிருந்தார். அதாவது, உதயநிதி ஸ்டாலின் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டால் திராவிட முன்னேற்ற கழகத்திலும் (தி.மு.க.) ஓர் ஏக்நாத் ஷிண்டே உருவெடுப்பார் என கூறியிருந்தார்.

இந்நிலையில், தெலங்கானா சட்டமன்றத்தில் நேற்று (13) உரையாற்றிய அம்மாநில முதலமைச்சர் கே.சந்திரசேகர ராவ், "சொந்தத் தொகுதியில் வெற்றி பெற முடியாத அண்ணாமலை தான், ஸ்டாலின் அரசை கவிழ்க்க போகிறாரா? இல்லை ஏக்நாத் ஷிண்டே போல தான் உங்கள் அரசியலா" எனக் கூறினார்.

மைசூர்

## தசரா யானைகளுக்கு பீரங்கி சத்த பயிற்சி

இந்திய ஜனாதிபதி திரவுபதி முர்மு, சாமுண்டீஸ்வரி அம்மன் கோவிலில் சிறப்பு பூஜை நடத்தி, அம்மனுக்கு மலர்தூவி மைசூர் தசரா விழாவை தொடங்கிவைக்க இருக்கிறார். ஊர்வலத்தில் 14 யானைகள் பங்கேற்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் 750 கிலோ கிராம் தங்க அம்பாரியை சுமந்து கொண்டு அபிமன்யு யானை முன்னே செல்லும். அதைத்தொடர்ந்து மற்ற யானைகளும், குதிரைகளும் அலங்கார ஊர்திகளும் கலைஞர்களும் அணிவகுத்துச் செல்வர்.

அபிமன்யுவுக்கு மணல் மூட்டையை சுமக்கும் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. ஜம்புசவாரி ஊர்வலம் தொடங்கும் போது, 21 வேட்டுகள் வானை நோக்கி சுடப்படும். இவ்வாறு சுடும் போதும், பட்டாசு வெடிக்கும் போதும், மேளதாளம் முழங்கும் போதும் தசரா யானைகள், குதிரைகள் மிரளும்.

எனவே யானைகள், குதிரைகள் இந்த சத்தங்களை கேட்டு மிரளாமல் இருக்கும் வகையில் பீரங்கி குண்டுகளை வெடித்து, வெடிச் சத்த பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

மும்பை

## மன்னர் சார்ள்ஸை நீங்கள் எப்படி முத்தமிடுவீர்கள்?

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸ் மும்பை வந்தபோது அவரை முத்தமிட்டு பரபரப்பை ஏற்படுத்திய நடிகை பத்மினி கோலாப்புரே, தனது நினைவலைகளை மகிழ்ச்சியுடன் பகிர்ந்துள்ளார்.

இங்கிலாந்து மகாராணி எலிசபெதின் மரணத்தை தொடர்ந்து, அவரது மகன் சார்ள்ஸ் புதிய மன்னராக பதவி ஏற்றுள்ளார். சார்ள்ஸ் இளவரசராக இருந்த போது, 30 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்தார்.

அப்போது மும்பை ராஜ்கமல் சினிமா ஸ்டூடியோவுக்கு வருகை தந்தார். இந்தத் தருணத்தில் எதிர்பாராத நிகழ்வு நடந்தது. அந்த ஸ்டூடியோவில் இருந்த சினிமா பிரபலங்கள் அனைவரும் இளவரசர் சார்ள்ஸை வரவேற்க காத்து நின்றனர். சார்ள்ஸுக்கு வரவேற்பு அளிக்க, ஆரத்தி எடுத்து மாலை



அணிவிக்கப்பட்டது.

அப்போது அங்கு நின்ற இந்தி மற்றும் மராத்தி நடிகையான பத்மினி கோலாப்புரே, சார்லஸ் அருகே நெருங்கினார். திடீரென அவரது கன்னத்தில் 'நச்' என்று முத்தம் கொடுத்தார்.

இது இளவரசர் சார்ள்ஸுக்கு இன்ப அதிர்ச்சியாக இருந்தது; அங்கு நின்றவர்களையும் வியப்பில் ஆழ்த்தியது. பாதுகாப்பு அதிகாரிகள் பதற்றம் அடைந்தனர். இது உலக அரங்கில் தீப்பொறியாக பரபரப்பை ஏற்படுத்தியது.

இருப்பினும் இளம்பெண் ஒருவர் இதுபோன்று நடந்து கொண்டமை, இந்திய கலாசாரத்துக்கு எதிரானது என்ற எதிர்ப்பு போராட்டங்களும் நடந்தன. இதற்கெல்லாம் நடிகை பத்மினி கோலாப்புரே கவலைப்படவில்லை.

தற்போது, இளவரசர் சார்ள்ஸ் இங்கிலாந்தின் மன்னராகி விட்டார். இந்தத் தருணத்தில் நடிகை பத்மினி கோலாப்புரேயிடம் 30 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த சம்பவம் குறித்து கேட்கப்பட்டது.

அப்போது அவர் மிகவும் மகிழ்ச்சியுடன் பழைய நினைவலைகளை பகர்ந்தார். அவர் கூறியதாவது: "மறக்க முடியாது. ராஜ்கமல் ஸ்டூடியோவில் நான் இளவரசர் சார்ள்ஸை முத்தமிட்ட நினைவுகளை ஒருபோதும் மறக்க முடியாது. அவர் தற்போது மன்னராகி விட்டார். இந்த சந்தர்ப்பத்தில் எனது நினைவுகள் வானத்தில் பறக்கின்றன.

இளவரசராக இருந்த சார்ள்ஸை முத்தமிடும் தைரியம் எனக்கு எப்படி வந்தது என்று தெரியவில்லை. ஆனால் அது நடந்து விட்டது. அதற்கு அவர் என்ன எதிர்வினையாற்றினார் என நினைவில்லை. ஆனால், அது என்னை சிரிக்க வைத்தது. அவருடைய அணுகுமுறையும் நடத்தையும் நட்பாக இருந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது" என்றார்.

பிரித்தானியா

ராணி எலிசபெத் மறைவு

# முன்னரே கணித்த இளம் பெண்

கடந்த 70 ஆண்டுகள் பிரித்தானியாவின் ராணியாக இருந்து வந்த ராணி எலிசபெத், தன்னுடைய 96 வயதில் கடந்த செப்டம்பர் 8 ஆம் திகதி இரவு உயிரிழந்தார்.

முன்னதாக, ராணி எலிசபெத் இறப்பதற்கு ஒரு சில தினங்கள் முன்பாகவே, அவரது உடல்நிலை சற்று மோசமாக இருந்ததாகவும், தொடர்ந்து மருத்துவர்களின் கண்காணிப்பில் அவர் இருந்து வந்ததாகவும் தகவல்கள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில், இளம் பெண் ஒருவர் ராணி எலிசபெத்தின் மரணம் குறித்து பல மாதங்களுக்கு முன்னரே கணித்த விடயம், ஒட்டுமொத்த உலகத்தினரையும் திரும்பி பார்க்க வைத்துள்ளது.

அமெரிக்காவின் Foxborough என்னும் பகுதியில் வசிப்பவர் Hannah Carroll. 19 வயதான குறித்த யுவதி





2022 ஆம் ஆண்டில் என்னென்ன நடக்கும் என்பது பற்றி, சில கணிப்புகளை கடந்த ஜனவரி மாதம் தெரிவித்திருந்தார். அப்படி அவர் கணிதத்தில், இதுவரை மொத்தம் 11 விஷயங்கள் நடந்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

அப்படி ஹன்னா கணித்த விஷயங்களில் மிக முக்கியமான ஒன்று தான் ராணி எலிசபெத்தின் மறைவு. கடந்த ஜனவரி மாதம், ஹன்னா கணித்திருந்த போது ராணி எலிசபெத் இந்த ஆண்டு மறைந்து விடுவார் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார். அதன் படி, தற்போது நிஜத்திலேயே நடந்துள்ள விடயம், பலரது கவனத்தையும் ஈர்த்து இளம்பெண்ணான ஹன்னாவை திரும்பி பார்க்க வைத்துள்ளது.

துனிசியா

அகதிகள் பயணித்த படகு விபத்து

# 11 பேர் உயிரிழப்பு



உள்நாட்டு போர் மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்த மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக செல்கின்றனர்.

இந்நிலையில் வட ஆபிரிக்க நாடான துனிசியாவில் உள்ள ஸ்பாக்ஸ் பிராந்தியத்தில் இருந்து 30-க்கும் மேற்பட்ட அகதிகள், படகு ஒன்றில் இத்தாலி நோக்கிப் பயணித்துள்ளனர்.

குறித்த படகானது துனிசியாவின் மஹ்தியா நகருக்கு அருகே மத்திய தரைக்கடல் பகுதியில் சென்று கொண்டிருந்தபோது திடீரென கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

துனிசியா கடலோர காவல் படையினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று தீவிர மீட்பு பணியில் ஈடுபட்டனர். 14 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மாயமான 12 பேரை தேடும் பணியில் மீட்பு குழுவினர் முழு வீச்சில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விபத்தில் பெண்கள், சிறுவர்கள் உட்பட 11 பேர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இருபதுக்கு 20 உலகக் கிண்ணம்

# இந்தியக் குழாமுக்குத் திரும்பிய பும்ரா, ஹர்ஷால்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடருக்கான இந்தியக் குழாமில் வேகப்பந்துவீச்சாளர்களான ஜஸ்பிரிட் பும்ரா, ஹர்ஷால் பட்டேல் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஆசியக் கிண்ணத் தொடரில் காயம் காரணமாக இவர்கள் இருவரும் இடம்பெறவில்லை.

ரவி பிஷ்னோய் குழாமில் இடம்பெறவில்லை என்பதோடு, மேலதிக வீரர்கள் பட்டியலில் மொஹமட் ஷமி, தீபக் சஹர், ஷ்ரேயாஸ் ஐயருடன் இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவுக்கெதிரான தொடரில் அர்ஷ்டீப் சிங்க்குக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளதோடு, தென்னாபிரிக்காவுக்கெதிரான தொடரில் ஹர்டிக் பாண்டியா, புவ்னேஷ்வர் குமாருக்கு ஓய்வளிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொடர்களிலும் மொஹமட் ஷமி, தீபக் சஹர் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), லோகேஷ் ராகுல், விராட் கோலி, சூரியகுமார் யாதவ், தீபக் ஹூடா, றிஷப் பண்ட் (விக்கெட் காப்பாளர்), தினேஷ் கார்த்திக் (விக்கெட் காப்பாளர்), ஹர்டிக் பாண்டியா, இரவிச்சந்திரன் அஷ்வின், யுஸ்வேந்திர சஹால், அக்ஸர் பட்டேல், ஜஸ்பிரிட் பும்ரா, புவ்னேஷ்வர் குமார், ஹர்ஷால் பட்டேல், அர்ஷ்டீப் சிங்.

# தென்னாபிரிக்கப் பயிற்சியாளர் பதவியிலிருந்து விலகும் பௌச்சர்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரின் முடிவில் தென்னாபிரிக்க தலைமைப் பயிற்றுவிப்பாளர் பதவியிலிருந்து மார்க் பௌச்சர் விலகவுள்ளதாக தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை உறுதிப்படுத்தியுள்ளது.

தனது முடிவை இங்கிலாந்துக்கெதிரான இறுதி டெஸ்டின் முடிவில் நேற்று முன்தினம் பிற்பகலில் கூட்டமொன்றில் தென்னாபிரிக்க அணிக்கு பௌச்சர் அறிவித்துள்ளார்.

கடந்த 2019ஆம் ஆண்டு டிசெம்பரிலிருந்து தென்னாபிரிக்க அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக பௌச்சர் இருந்து வருகிறார். இந்நிலையில் பௌச்சரின் ஒப்பந்தமானது அடுத்தாண்டு உலகக் கிண்ணம் வரையிலும் காணப்படுகிறது.

இந்நிலையில், தென்னாபிரிக்காவின் புதிய இருபதுக்கு 20 தொடரின் மும்பை இந்தியன்ஸ் கேப் டௌணின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக பௌச்சர் கடமையாற்றுவார் எனக் கூறப்படுகிறது.

**இலங்கைக்கு வருகை தந்த எமது ஆசிய ராஜாக்கள் மற்றும் இராணிகள் பண்டாரநாயக்க விமான நிலையத்திலிருந்து திறந்த வாகன அணிவகுப்பில் அவர்களின் பிரதான விளையாட்டுத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது, நாட்டின் விளையாட்டு ஆர்வலர்கள் ஒன்று கூடி அவர்களுக்கு மிகுந்த வரவேற்பு அளித்தனர். விளையாட்டு அமைச்சு, ஸ்ரீலங்கா கிரிக்கட், இலங்கை வலைப்பந்து சம்மேளனம் மற்றும் தேசிய கிரிக்கெட், வலைப்பந்து அணிகளின் உத்தியோகபூர்வ அனுசரணையாளரும், இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனருமான டயலொக் ஆசிஆட்டா ஆகியவை இணைந்து இந்த விசேட வரவேற்பினை ஏற்பாடு செய்திருந்தன.**

**அந்த சிறப்பு நிகழ்வின் சில புகைப்படங்கள்**
























விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 14 செப்டெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.